அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

சுயமரியாதைச் சுடர்

அண்ணன் குருசாமி அவர்களைப் போன்றோர், வேறிடத்திலிருந்தாலும் அவர் போன்றோர் சுயமரியாதை இயக்கத்துக்குஆற்றியுள்ள அரும்பணியினை யாரும் மறுக்க முடியாது.

சாதித்திமிர் பேசப்பட்ட காலத்தில் அதன் முதுகின் மீது ஏறி உட்கார்ந்து, சிம்மமெனப் பிறரைப் பார்த்துக் கேலிச் சிரிப்பை வீசிய ஒரு சிலரிலே அவரும் ஒருவர்.

கலப்புத் திருமணம் என்பது கவிதைக்கும்கதைக்கும் மேடைக்கும் என்றிருந்த நேரத்திலே, 'செயல் மூலம் கலப்பு மணங்கள் நடைபெறச் செய்வதே சுயமரியாதைக்காரனின் முதல் வேலை' என்று முனைந்தவர்களில் முதல்வர் அவர்.

பழுத்த வைதீகக் குடும்பத்திலே ஊறியவர்! அவருடைய சமூகம், பழமைப் பிடிப்புகளையும் பெருமைகளையும் இழக்கத் துணியாத ஒன்றாகும். அப்படிப்பட்ட சூழ்நிலையையே துச்சமெனத் தள்ளும் துணிவுகொண்டு, கலப்புத் திருமணம் செய்துகொண்டார் குஞ்சிதம்அம்மையார் அவர்களை.

அம்மையார் அவர்களுடைய குடும்பம் ஒரு சுயமரியாதைத்திருவீடாகும்! அவர்கள் மட்டுமின்றி அவர்களுடைய தங்கையாரும் கலப்பு மணம் செய்து கொண்டவர்கள் ஆவார்கள். சுயமரியாதை இயக்கத்தை வளர்ப்பதைத் தமது வாழ்க்கைக் கடனாகக்கொண்ட குடும்பம் அது! அப்படிப்பட்ட குடும்பத்தார் கோவெனக் கதறவும், அன்புக்குரிய கணவர் கண்ணீர் வடிக்கவும், நமது மனம் எல்லாம்பதறவும் திருமதி குஞ்சிதம் அம்மையார் அவர்கள் காலமான செய்தியைத் தோழர்கள் அறிவர்.

அவரைப்பற்றி எண்ணும் போது, பலவிதமான எண்ணங்கள் உருவாகின்றன. சுயமரியாதை இயக்கத்தை வளர்த்தோர், தங்களுக்குள் பிணைந்த ஒரு குடும்ப பாசத்தையும் வளர்த்துக் கொண்டனர். "அத்தான்! அண்ணன்! தங்கச்சி!" என்று பொன்னம்பலனாரும், லிங்கமும்,சித்தையனும் அழகிரியும், அண்ணாவும் முறை சொல்லி , விளித்து உரையாடும் அந்தக் காட்சிகளை நினைத்தால், 'ஏ! காலமே! நீ மிகவும் கொடியவன்' என்றே கூறத் தோன்றும். திராவிட கழகமாயிருந்த காலத்தில் சென்னையில் அண்ணாவை வரவேற்கும் இல்லம் அம்மையாருடையதாகும் ஏனைய கழகத் தோழர்களுக்கும் அரியதொரு நூலகம்போல இருந்தது! நெடுஞ்செழியன், செழியன், வாணன் முதலியவர்களோடு அண்ணா அவர்கள் அங்கே போய்விட்டால், இரவு கழிவது தெரியாமல் பேசிக்கொண்டேயிருப்பார்களாம்.

அன்னை எனலாம் அன்பில்! அப்படிப்பட்டவர், குஞ்சிதம் அம்மையார். படிப்பிலும், தான் பார்த்துவந்த கல்வித் துறையிலும் பேரும் புகழும் பெற்றவர். அப்படிப்பட்டவரை, தி. மு. க, இயக்கும் சென்னை நகராட்சி மன்றம் மாநகரின் முதல் கல்வி அதிகாரியாக நியமித்து, பாசஉணர்வையும், கொடுக்கப்பட வேண்டிய இடத்தையும் அளித்து மகிழ்ந்தது. அந்தோ! அம்மையார் மூலம் நற்பணிகள் பலநடக்கும் என்று நாமெல்லாம் நம்பியிருந்தோம்—அவர் சென்று கண்ட கல்விக்

(12-ம் பக்கம் பார்க்க)



"திருமணம்—கூட்டம் — பெயர்சூட்டல் — நகராட்சி வரவேற்பு இப்படி எதானாலும் பணம் என்கிற பாதையைக் காட்டியவர் பெரியார்! கூட்டத்தில் கேள்வி கேட்க ரூபாய் ஒன்று கட்டணம் என்று தோழர் சம்பத் ஆரம்பித்திருக்கும் புதுமுறை, அவர் மனதிலும் அய்யாவின் பாதையே இருப்பதைக் காட்டுகிறது என்று சித்தரித்திருக்கிறார் நமது ஓவியர்.

60,00,000 பேர்களைக் கொன்ற காதகன்!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

எப்படி நீதிக்கட்சி ஜனநாயக முறையுடன் பார்ப்பனர்களைப் போல இன்னொரு பெரிய வகுப்பையும் முன்னேற்ற விழைந்ததோ அதே போன்ற வழியைத்தான் திராவிட முன்னேற்றக் கழகமும் செய்ய விரும்புகிறது

"பார்ப்பனர்களை விரட்டு! வங்காளக்குடாக்கடலில் தள்ளு! விந்தியத்துக்கு வடக்கே ஓட்டு!" என்று தீவிரமாகப்பெரியார் பேசியதுண்டு. நாட்டின் வாழ்வில் என்ன இருந்தாலும் பார்ப்பன சமூகமும் இரண்டறக் கலந்து விட்டது என்கிற கண் கண்ட உண்மையை யாரும் மறுக்கமுடியாது. அதே சமயம் அவர்களிடத்தில் நாட்டின் நிலை காட்டும் ஏடுகள் உள்ளதையும், உயர்வு தாழ்வு மனப்பான்மையை உண்டு பண்ணுவோர் இருப்பதையும் நாம் மறப்பதற்கில்லை. அப்படிப்பட்டோர், பார்ப்பனரல்லாத வகுப்பிலும் இல்லையென்று யார் சொல்ல முடியும்? எத்தனை முதலியார்கள், எத்தனை பிள்ளைமார்கள்,எல்லோரையும் கீழாக இன்னும் கருதிக் கொண்டிருக்கிறார்கள்? இப்படிப்பட்ட பேதம், சமூகம் முழுதுமே கவனிக்க வேண்டிய ஒன்றாகும், இப்பேதங்களை அழிவு வழியிலும் போக்கலாம்! அதைவிட,அமைதி வழியின் மூலம் அவர்களுடைய மனங்களிலும் மனமலர்ச்சிஉண்டாக்குவதன் மூலம் உண்டாக்கலாமன்றோ? அப்படிச் செய்வதன் மூலம் சமூகத்துறையிலும் பொருளாதாரத் துறையிலும் உள்ள பேதங்களைப் போக்கலாமே! இதற்கான மன மலர்வு அந்தந்த வகுப்புகளுக்கு உண்டாக வேண்டும் என்பதே நம் அவாவாகும். அதனால்தான் மனம் மாறி வரும்பார்ப்பனகுல இளைஞர்களை தி. மு. க. வரவேற்கிறது!!

இப்படிப்பட்ட மன மாற்றத்தையோ அல்லது ரஷ்யாவில் சட்ட மூலம் பொருளாதார சமத்துவம் உண்டாக்க முனைந்தது போலவோ செய்ய முயற்சிக்கவில்லை நாஜிகள்.

ஆரிய இனமே உயர்ந்தது—என்றான் ஹிட்லர்!

ஆரியரல்லாதவர்கள் மனிதர்களே அல்ல—என்கிற வெறியை உண்டு பண்ணினான்!!

அதனாலேயேஇரத்தத்தொடர்புகள் ஏற்படக்கூடாது, கலப்பு மணம் போன்ற எதுவும் நிகழ்ந்து விடக்கூடாது என்று—சட்டமே செய்தான்!!!

எதாயிருந்தாலென்ன, எது போனாலென்ன, யூதர்களுக்கு உலகிலே வேலையேயில்லை— என்றே கருதினர்.

ஸ்ட்ரெய்ச்சர் எனும் ஏட்டாசிரியன், சிறு குழந்தைகள் முதற்கொண்டு இந்த வெறியை வளர்க்கப் பாட நூல்களை எழுதினான். இப்படியொரு வெறி! உலகமே கண்டிராத வெறி! அதுவும் ஒரு அரசே எதிரியாக யிருந்த நிலை! ...இச்சமயத்தில் ஒரு உண்மையை யாவரும் உணர்ந்ததாக வேண்டும்—இப்படி நாஜிகள் முயன்றனரே ஒழிய ஜெர்மானியர் அனைவருமே இதை விரும்பினர் என்று பொருளல்ல! ஜெர்மன் மக்கள் அனைவருமே நாஜிகளுமல்ல!!—இதனை ஈச்மென வழக்கு ஆரம்பமான சமயத்தில், மேற்கு ஜெர்மனி சான்சலரான அடினார் வலியுறுத்தியிருக்கிறார். அதை மூன்று நான்கு இதழ்களுக்கு முன்பு நானும் குறிப்பிட்டிருக்கிறேன. எனக்கு ஜெர்மானிய மக்கள்மீது ஆத்திரமோ, யூதர்கள்மீது அபாரஅன்போ என்று பொருளல்ல; எல்லோரையும் நான்'மனிதர்'களாகவேமதிக்கிறேன்- மனிதத்தன்மை மாறும் போது என்னென்ன ஏற்படும் என்பதை வலியுறுத்துவதே ஈச்மென்னைப்பற்றிநான் எழுதுவதன் நோக்கம்...

* * *

கொடுமைகள் தொடருமேயானால் அந்த கொடுமைகளுக்கு அடங்கி ஒடுங்கி, ஆட்டு மந்தைகளாக எத்தனை நாட்களுக்குத்தான் மக்கள் இருப்பார்கள்? எவனாவது ஒருவன் எரிச்சலை அடக்கிக் கொள்ளத்தானே முயற்சிப்பான்?

கிரின்ஸ்வேன் என்கிற 17 வயது யூத வாலிபன் ஒருவன் இப்படிப்பட்டஎரிச்சலுக்கு ஆளானான்! 1938 நவம்பர் 7ந்தேதி, பாரிசிலுள்ள ஜெர்மன் அரசுத்தூதர் அலுவலகத்தில் அரசு தூதரான ஜெர்மானியரைக் கொன்று வஞ்சம் தீர்ப்பது என்கிற திட்டத்தோடு மறைந்து நின்றான். அவரைக் கொல்வதற்குப் பதில் அந்த அலுவகத்தில் வேலை பார்த்த வாம்ராத் என்பவரைக் கொன்றான். வாபராத் என்பவர் யூதர்களை வெறுக்கும் வெறியரல்ல! யூதர்கள் மாட்டு ஜெர்மானியர் எடுக்கும் நடவடிக்கைகளைக் கண்டித்தே வந்தவர்! என்றாலும் ஆத்திரமடைந்த யூதவாலிபனால் மாண்டார்.

இச்செய்தி எட்டியதுதான்தாமதம்! ஜெர்மானியர் வெகுண்டனர் ஓவென்றலறிக் கொண்டு எழுந்தனர். ஒரு யூதன் வீடுபாக்கியில்லாமல் தாக்கினர். எங்கே யூதர்கள் இருந்தனரோ, எங்கே அவர்கள் நடமாடினார்களோ, அங்கேயெல்லாம் பட்டப்பகலில் பகிரங்கமாகப் பாலத்கார நடவடிக்கைகள் தோன்றின! இதன் பலனாய் வீடிழந்த யூதர்கள்! கற்பிழந்த மாதர்கள்! கண்களை யிழந்தோர்! பரதேசியானோர்! பரிதாபமான நிலை பெற்றோர்!-அநேகம், அநேகம். இந்தக் கொடுமைகளையெல்லாம், ஹிட்லரின் அரசு, தடை செய்யவில்லை. ரசித்தது. இப்படியொரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்ததுபோல் நடவடிக்கைகளைச் சொரிந்தது. அந்தச் சமயம் ஜெர்மனியில் அமெரிக்க அரசின் தூதராயிருந்த 'புசல்' என்பார் அனுப்பிய 'ரிப்போர்ட்,இது!

ஈச்மென்னுடைய முத்த மகன் க்ளாஸ் எப்படி தன் தந்தையை போனர்ஸ் அயர்சிலிருந்து கொண்டு போனார்கள் என்பதைம் படுத்துக்கொண்டிருக்கிறான்! ஒரு அர்ஜென்டைனா பெண்ணைத் திருமணம் செய்து கொண்ட இவன், எப்போதும் இடையில் ஒரு கைத் துப்பாக்கி வைத்துக்கொண்டு வாழ நேர்ந்துள்ளது தந்தை செய்த வினையால். யாராவது ஒரு யூதன், தங்களை ஏதாவது செய்து விடுவர்னோ என்கிற பயத்தோடு அனுதினமும் வாழ்கிறதாம் ஈச்மென் குடும்பம்.

"நவம்பர் 10! வாம்ராத் கொலையுண்ட செய்தி எட்டியதுதான் தாமதம்! யூதர்கள் வீடுகள் கொள்ளையிடப்பட்டன! மூன்றடுக்கு மாடி வீடு ஒன்றிலிருந்து 18வயது யூத வாலிபன் ஒருவன் தரைக்கு வீசியெறியப்பட்டு கொல்லப்பட்டான்! அவனுடைய படுக்கைகளும் ஆடைகளும் தீமூட்டப்பட்டு அவன்மீது வீசப்பட்டது! யூதர்களுடைய கடைகள் தூள் தூளாயின! தீ மூட்டப்பட்டன! 'எஸ். எஸ்.'கள் என்றழைக்கப்படுவோரும், 'புயல் படை' எனும் பிரிவினரும் தத்தமது யூனிபாரங்களை எடுத்துவிட்டு சாதாரண உடையில் புகுந்து இந்தஅட்டகாசம் செய்ததாக அறிகிறேன். இந்தப் படையினர் நாஜிகளின் படைப்பிரிவுகளாகும். யூதர்கள் தமது கோயிலுக்குள் ஓடியபோது, அந்தக் கோயிலும் சுடப்பட்டது! இதன் விளைவாக பத்து யூதப் பிணங்கள் வீழ்ந்தன! கோயிலுக்குள்ளிருந்தோரெல்லாம் கைது செய்யப்பட்டதால், இப்படிப் பிணங்கள் விழுந்து கிடந்ததே வெளிக்குத் தெரியவே பத்து நாட்களாயின! இதையெல்லாம்விடக் கொடுமை, பதினாறு வயதிலிருந்து அறுபது வயதுவரையுள்ள யூதர்களையெல்லாம் விசாரணைக்கென்று சொல்லி அழைத்துப் போய் தனிக் கொட்டடிகளில் பூட்டிக் கொடுமைப்படுத்தினர்! இந்தஒருதகவலை வைத்து எல்லா யூதர்களுக்கும் கூட்டு அபராதம் போடப்பட்டும் வசூலிக்கப் பட்டது!!"

இப்படியெல்லாம் ஆரம்ப காலத்தில் சட்ட மூலமும், தத்தமது சொந்த முறையிலும் பழி வாங்கும் முயற்சியின் விளைவாகவே போர் மூண்டதும், யூதர்களையே ஒழித்துக் கட்டுவது என்கிற திட்டம் தீட்டப்பட்டுதீர்த்துக் கட்டப்பட்டது!

(11-ம் பக்கம் பார்க்க)

குறைந்த செலவில்! உயர்ந்த வகையில்!
எல்லாவிதமான அச்சு வேலைக்கும்
தகுந்த இடம்!
அமிர்தா பிரிண்டர்ஸ்
ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம்.

மாணவர் முழக்கம்!

கோவை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முதல் மாநாடு 9—7—61 ஞாயிறு காலை 9- மணி முதல் இரவு 10—மணிவரை கோவை ஸ்டேன்ஸ் மில் கல்யாண மண்டபத்தில் மிகச் சீறும் சிறப்புமாக நடைபெற்றது.

காலை 8 மணியளவில் கோவை ரயிலடியிலிருந்து ஓர் மாபெரும் மாணவர் ஊர்வலம் புறப்பட்டு, நகரின் முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று மாநாட்டு மண்டபத்தை அடைந்தது. நகரிலுள்ள பல்வேறு கல்லூரி மாணவர்களும் பங்கேற்று ஊர்வலத்தைச் சிறப்பித்தனர். கேரளத்திலிருந்து வந்திருந்த மாணவர்களின் மலையாள ஒலி முழக்கம் எல்லோரின் கவனத்தையும் ஈர்ந்தது. கேரள நண்பர்கள் சில்வர்ஸ்டர், மகூத் போன்றோர் அதனை முன் நடத்திச்சென்றனர்.

பச்சையப்பன் கல்லூரி மாணவர் தோழர் இளங்கோவன் பி. ஏ. மாநாட்டினைத் துவக்கிவைத்து கருத்து மிக்க சொற்பொழிவாற்றினார்.

வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் கே. ஏ. கிருட்டிணசாமி எம். ஏ. அவர்கள் எல்லோரையும் மனங்குளிர வரவேற்று, மாணவர் கழக மாநாட்டின் அவசியத்தையும், அரசியலுக்கும் அதற்கும் உள்ள தொடர்புகள் பற்றியும் தனது உரையில் குறிப்பிட்டார்.

சட்டக் கல்லூரி மாணவர் தோழர் அப்பர்சுந்தரம் எம். ஏ. பி. டி. அவர்கள் தலைமையில் மாநாடு துவங்கியது. தனது தலைமையுரையில் சீரிய கருத்துக்களைச் சுந்தரத் தமிழில் தலைவர் தொடுத்துக் கொடுத்தார்.



வரவேற்புக் குழுத் தலைவர் கே. ஏ. கிருட்டிணசாமி எம். ஏ. பேசுகிறார்.

தோழர்- பெ. சீனிவாசன் பி. ஏ. அவர்கள் 'நமது பயணம்' என்ற தலைப்பினில் பேசியதுடன் மாநாட்டின் முற்பகல் நிகழ்ச்சி 1—30 மணியளவில் முடிந்தது.

கோவை —கேசவன் குழுவினரின் இன்னிசையுடன் பிற்பகல் நிகழ்ச்சி 3- மணியளவில் தொடங்கியது. பிற்பகல் நிகழ்ச்சியில் ஐம்பதுக்கு மேற்பட்ட மாணவப் பேச்சாளர்கள் பங்கேற்று சிறப்புரையின் மீதும், தீர்மானங்களின் மீது கருத்துரை வழங்கினர்.

உடுமலை பருவத கண்ணன் அவர்கள் "தி. மு. க. வில் மாணவர்கள்" என்ற தலைப்பின் மீது பேசினார்.

"இலட்சிய வரலாறு" என்ற தலைப்பினில் மதுரை—மாறவேள் பி. ஏ. அவர்கள் அழகியதோர் விளக்கம் அளித்தார். தோழர் அன்பாலன் பி. ஏ. பி. டி. 'கவிஞர் உள்ளம்' என்ற தலைப்பில் பேசினார்.

பச்சையப்பன் கல்லூரி மாணவர் நீ. அன்புச்செழியன் பி. ஏ. 'நாம்' யார் என்பதனை கொஞ்சு தமிழினில் எடுத்துக் காட்டினார். பேரூர் தமிழ்க் கல்லூரியைச் சார்ந்த திரு. புலமைப்பித்தன், 'இந்தி ஆதிக்கம்' பற்றி படம் பிடித்துக் காட்டினார்.

அ. கணபதி எம். ஏ. 'மாணவர் இயக்க வரலாறு' பற்றிய புதிய கருத்துக்களை மாநாட்டினரின் சிந்தனையினைத் தூண்டும் வகையில் சுட்டிக் காட்டினார்.

அதனை அடுத்து தில்லை அறிவுடை நம்பி, பி. கே. சுப்பிரமணியம், உதகை செயராமன், சனார்த்தனம், மணிமாறன் ஆகியோர் பல்வேறு தலைப்பினில் பேசினர்.

மாணவர் சமுதாயத்தின் எதிர் நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளையும் உள்ளடக்கிய தீர்மானங்கள் பல முன்மொழிந்தும் வழிமொழிந்தும் பல மாணவ நண்பர்கள் பேசினர். தீர்மானங்கள் அனைத்தும் ஒருமனதாக நிறைவேறின.

கேரளத்திலிருந்து மாநாட்டிற்கு வந்திருந்த நண்பர்கள் சில்வர்ஸ்டர், மகூத் ஆகியோர் எழுச்சிக் கொள்ளும் வகையில் 'கேரளத்தில் தி. மு. க. என்ற தலைப்பில் மலையாள மொழியில் உரையாற்றினர். அவர்களின் உரைகள் மாநாட்டிற்கு மகுடமாக அமைந்தன என்றால் மிகை அல்ல

தோழர் என். வி. என். சோமு அவர்கள் 'அதுவும் இதுவும்' என்ற தலைப்பினில் பேசினார்.

மதுரை தோழர் கு. இளஞ்சேரன் பி. ஏ. அவர்கள் 'மறுமலர்ச்சி' என்ற தலைப்பினில் எண்ணத்தைக் கிளறும் வகையில் சொல்லோவியம் தீட்டிக்காட்டினார். விருதை அமுதன் பி. ஏ. 'சீர்திருத்தம்' என்ற தலைப்பினில் அதன் அவசியம் பற்றி அழகுபடச் சொன்னார்.

அடுத்து சட்டக்கல்லூரி மாணவர் தோழர் எம். எஸ். வெங்கடாசலம் எம். ஏ. 'எது தேசீயம்' என்ற தலைப்பினில் நீண்டநேரம், பேசி, நல்ல விளக்கமளித்து மாற்றாரின் மயக்கம் நீக்கினார்.

இறுதியாக தி. மா. மு. க. பொதுச் செயலாளர் தோழர் எஸ். டி. சோமசுந்தரம் பி. இ. அவர்தன் கூடியிருந்த ஆயிரக் கணக்கான மாணவ நண்பர்களுக்கு நல்லதோர் அறிவுரையாற்றினார்.

தலைவரின் பின்னுரைக்குப் பின் தோழர் கிருட்டிணசாமி எம். ஏ. அவர்கள் மாணவர் கழக மாநாடு மிகச் சிறப்பாக நடக்க ஒத்துழைத்த அனைவர்க்கும் நன்றி கூற மாநாடு இரவு 10—மணியளவில் முடிந்தது.

மரியாதை கோள், தோழா!

"உன்னுடைய அயலானுக்கு விரோதமாய்ப் பொய்ச் சாட்சி கூறுதிருப்பாயாக" என்றார் ஹீப்ரு மக்களின் வழி காட்டியாகிய மோசஸ்.

இவருக்குப்பின் ஏழு நூற்றாண்டுகளுக்குப் பிறகு சீன நாட்டில் கன்பியூஷியஸ் எனும் பெரியார்:

"உனக்கு செய்யப்படும்போது நீ எதை விரும்புவதில்லையோ, அதை நீயும் மற்றவர்களுக்குச் செய்யாதே' என்றார்.

அரச பதவியைத் துறந்து துறவியான புத்தபிரான், தம்முடைய சீடர்கள் உலகத்திற்கு செல்லுமுன், அவர்களிடம் கூறியதாவது:

"மக்களின்மேல் உள்ள இரக்கம் காரணமாக, பலருடைய நலனைக் கோரி, எப்போதும் பாடுபடுங்கள். உங்களுக்கு 'விரோதம்' என்ற சொல் வேண்டாம். மற்றவர்களையும் மதித்து, அதன் மூலம் மதிப்பைப் பெருங்கள்" என்றார்.

அரேபியாவில் எழுந்த தீர்க்கதரிசியான நபிகள் நாயகம்

"அடுத்தவர்களுக்கு அநியாயம் செய்யாதே. அப்போதுதான் உனக்கும் அநியாயம் ஏற்படாது" என்றார்.

பண்டைய பாலஸ்தீன நாட்டிலிருந்து கிளம்பிய இயேசு கிறிஸ்து எனும் ஏழை யூதர்,

"உன்னுடைய விரோதியிடமும் அன்பாயிரு" என்றார்.

இந்தப் பொன்மொழிகளின் புகலிடமாம் நமது அண்ணாவும், மாற்றாரையும் நாம் மதிக்கவேண்டும், விரோதிகளையும் நேசிக்க வேண்டும், எதிர் கட்சியினர் என்பதாலேயே அவர்களுக்குரிய மரியாதையை நாம் மறுக்கக்கூடாது, அவர்களிடமுள்ள நல்லதை நல்லது என்றேநாம் ஒப்புக் கொள்ளவேண்டும் என்பதை உணர்த்தவே,

"மாற்றார் தோட்டத்து மல்லிகை என்றால் மணக்காது எனக் கூறும் மனநிலை கொள்ளக் கூடாது" என்று அடிக்கடி கூறிவருகிறார்கள். இந்தப் பெருந்தன்மை எங்கே! முதல் நாள்வரையில் மரியாதையாகப் பழகிவிட்டு, மறுநாள் வேறு கட்சி ஆரம்பித்ததும், "டேய்! அடா! தோழர் அண்ணாதுரை", என்று கூறும் புதுக்கட்சியின் இழிந்த மனநிலை எங்கே!!

எனது பணி

கலைத்துறை மூலம் நாங்கள் செய்து கொண்டுவரும் கழகப் பணியை நீங்கள் அறிவீர்கள். இருந்தாலும் நாங்கள் செய்து வரும் தொண்டினை எடுத்துக் கூறுமாறு என்னைப் பணித்திருப்பதானது எதிர்காலத்தில் நீ என்ன செய்யப் போகிறாய் என்று என்னைக் கேட்பதுபோல் இருக்கிறது.

கலைஞர்களாகிய நாங்கள் எங்களுடைய நாட்டுப் பணியைச் சரியாகச் செய்திருககிறோம் என்றுதான் கருதிக் கொண்டிருக்கிறோம்.

ஒரு வியாபாரிக்கும், கலைஞனுக்கும் உள்ள தொழில்முறை வேறுபட்டது. அதேபோல் ஒரு தொழிலாளிக்கும் கலைஞனுக்கும் உள்ள தொழில் நிலை வேறுபட்டது. கலைஞன் என்பது பல்வேறுபட்ட கலைஞர்களைக் குறித்தாலும் நான் கலைஞன் என்று குறிப்பிடுவது இந்த நேரத்தில் நடிகர்களைத்தான். ஒரு கலைஞன்—நடிகன் ஒரு சினிமாவில் நடித்தால் அவனுக்குமனச்சாட்சியும், நல்லுணர்வும் இருக்குமானால் அவன் தாய் நாட்டை மறந்துவிட முடியாது. நான் மனிதன்; ஆனால் நடிகன். நான் நாட்டுக்குத் தொண்டு செய்யக்கடமைபட்டவன் ஆனால்

> மதுரை திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற தி. மு. க.பொதுமாநாட்டில், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், 'கலை மூலம் கழகப்பணி' என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு:

நடிகன். இந்த நாட்டுக்குரியவன்; ஆனால் நடிகன். வியாபாரியும் மனிதன்தான். ஆனால் எனக்கு இரு கடமைகள் இருக்கின்றன. நான் தி. மு. கழகக் கொள்கைப்படித்தான் நடிப்பேன் என்று சொல்ல உரிமையுண்டு. அது என் கடமை.

ஒரு வியாபாரி. 'என்னுடைய கட்சிக் கொள்கையைக் கொண்டிருப்பவர்களுடன்தான் வியாபாரம் செய்வேன்' என்று சொல்லத் தேவையில்லை. ஆனால் நான் அவ்வாறு நடக்க முடியாது என் தொழில் முறை அப்படிப்பட்டது.

கொள்கை எங்கள் இரத்தத்தில் ஊறி இருக்கிறது. ஆனால் சோதனைகள் எங்களுக்குத்தான் அதிகமாக ஏற்படுகின்றன.

போர்க்காலத்தில் இராணுவம், முதலில் படையைஇறக்குவதற்கு இடத்தைச் சரி செய்வதுபோல் நாங்களும், கலைத்துறைமூலம்கழகத்திற்குப் பாதை அமைத்துத் தருகிறோம். இராணுவம் போகப் பாதை அமைத்துத்தரும் தொழிலாளிக்கு இராணுவத்திற்குள்ள மரியாதை கிடையாது. அவர்களைப் போலத்தான் கலைஞர்களாகிய எங்கள் நிலையும் இருக்கிறது ஏனைய கலைஞர்களை மனதில் தில் வைத்துப் பாருங்கள். நாங்கள் வேறு எங்கிருந்தாலும் ஒரு சிலர் உள்ளங்களில்தான் தான் எங்களுக்கு இடம் கிடைக்கும். அண்ணா அவர்கள்தான் எங்களை ஒவ்வொருவர் உள்ளத்திலும் இடம் பெறச் செய்தார்.

தி. மு. கழகம் ஒன்றுதான் எங்களை மனிதர்களாக நினைக்கிறது. மற்றக் கட்சிகள் விளம்பரத்துக்காகக் கலைஞர்களை அழைக்கக் கூடும். எங்களை தி. மு. க. மதிப்பதுபோல மற்றக் கட்சிகள், மற்றக் கலைஞர்களை மதிப்பதில்லை

நாங்கள் நாட்டுக்காக நடிக்கிறோம்; நாங்கள் எதிலே குறைவு? நடிக்கிறோம் என்றால் அதிலே கொள்கையை விட்டுக் கொடுத்திருக்கிறோமா? நாங்கள் நாட்டுத்காக உழைக்கவில்லையா? நாங்கள் மேடையில்தான் வேடம் போடுகிறோம்; வாழ்க்கையிலே வேடம் போடுகிறார்கள் சிலர்!

திருடாதே என்று படத்தின் மூலம் வற்புறுத்துகிறோம். பம்பாயிலே இங்கிருந்து சென்ற தமிழன் பிச்சை எடுக்கும் பரிதாபக் காட்சியைக்கண்டு வந்ததாக, நமது தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் ஒருகூட்டத்திலே பேசுகையில் குறிப்பிட்டார். அதைக் கேட்ட நான், அத்தகைய காட்சியொன்றை, 'சபாஷ் மாப்பிளே' என்ற படத்திலே சேர்க்கச்செய்து நாட்டுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறேன். இதுதான் கலைமூலம் கழகத்துக்கு நாங்கள் செய்யும் பணி.

நான் கோழையல்ல; உணர்ச்சியற்றவனல்ல; கொள்கையை விட்டுக் கொடுக்க விரும்புபவனல்ல. ஆனால் என் உள்ளத்தில் நெடுநாளாக இருந்துவரும் எண்ணத்தை இங்கு எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலைஞர்களுக்கு அண்ணா அவர்கள் விதிவிலக்கு அளித்தார்கள். வியாபா ; தி. மு. க. கொள்கையுள்ளவர்களுக்கு மட்டும்தான் சாமான்களை விற்க வேண்டும் என்று விதி இருக்கிறதா? இல்லை ஆனால் கலைஞர்களாகிய நாங்கள் கொள்கைக்காகவே எங்களை நாங்களே கட்டுப்படுத்திக்கொண்டிருக்கிற விதி ருக்கிறது. எனவே வியாபாரம் வேறு; கலை வேறு. படம் பார்க்கிறவர்கள் கொள்கைகளைப் பதிய வைத்துக் கொண்டிருக்கிறார்கள். போராட்டத்தில் நாங்கள் ஈடுபட்டால் அதனால் எங்களை எதுவும் பாதிக்காது. ஆனால், படப்பிடிப்பில் கலந்து கொள்ள முடியாத நிலையில் நாங்கள் சிறை சென்றுவிட்டால் படமுதலாளிகளின் நிலையும், அந்தப்படத்தை நம்பிப் பிழைத்து வந்தவர்கள் நிலையும் என்ன ஆவது? எங்களால் நஷ்டம் ஏற்பட்டு விட்டதாகக்கூறி மீது நஷ்ட ஈடு கோரினால் என்ன செய்வது? ஆகையினால்தான் அண்ணா அவர்கள் எங்களுக்கு விதிவிலக்கு அளித்தார்கள்.

சிலர் சொல்லுகிறார்கள் அண்ணா அவர்களுக்கு நாங்கள் பணம் கொடுத்திருக்கிறோமாம்! அவரிடமிருந்து நான் பெற்றிருக்கிறேன். பல இலட்சங்களை—அப்படிப்பட்டலட்சியத்தை!! அவருக்கு நான் இதுவரை கொடுத்தது ஒன்றுமில்லை. பலர் பல அரசியல் கட்சித் தலைவர்களுக்குப் பணம் கொடுத்திருக்கலாம். ஆனால் அண்ணா அவர்களுக்கு நாங்கள் எதுவுமே கொடுத்ததில்லை. அண்ணா அவர்கள் தான் எனக்கு எல்லாம். நான் என்றும் அவர் தொண்டன். தங்களுக்கும் மேடையிருக்கிறது, வெளியிடப் பத்திரிகை இருக்கிறது என்பதற்காக யார்யாரோ எதை யெதையோ சொல்லுகிறார்கள். நடிகருக்காகக் கொள்கை இல்லை; கொள்கைக்காகவே நடிகன் இருக்கவேண்டு .

இலங்கைத் தமிழருக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக சென்னையில் நடந்த மாபெரும் ஊர்வலத்தில் நான் கலந்து கொள்ளவில்லை. பட்டப்பகலில் கொதிக்கும் வெயிலில் 10மைல் தூரம் நடந்துசென்ற அந்த ஊர்வலத்தில் நானும் கலந்து கொள்ள வேண்டும் என்றுதான் என்மனம் துடித்தது. ஆனால் நான் இப்பொழுது எந்த ஊர்வலத்திலும் கலந்து கொள்வதில்லை என்று இருக்கிறேன். ஏனென்றால், சினிமா நடிகர் கலந்துகொள்வதால் கூட்டம் அதிகம் கூடுகிறது என்று சொல்கிறார்கள். அந்த எண்ணத்தை மாற்ற வேண்டும் என்பதே எனது நோக்கம். நாங்கள் யாரும் கலந்து கொள்ளாமலே அத்தனை இலட்சம் பேர் இலங்கை அறப்போர் ஆதரவு ஊர்வலத்தில் கலந்துகொண்டது மாற்றுக் கட்சியினரின் கூற்றுக்கு மறுப்புரைப்பதுபோல் அமைந்து விட்டது.

அன்று நான் கலந்து கொண்டிருந்தால் நான் கலந்து கொண்டதனால்தான் அத்தனை பெரிய கூட்டம் ஊர்வலத்தில் கலந்து கொண்டது என்று கூறியிருப்பார்கள். கூட்டம் எம்.ஜி. இராமச்சந்திரனுக்காகவோ, இராசேந்திரனுக்காகவோ அல்ல; கொள்கைக்காகவே கூடுகிறது என்பதை மாற்றார்கள் உணர வேண்டும் அதை உணர்த்துவதை என் கடமையாகக்கொண்டிருக்கிறேன்.

எனக்குஇருக்கின்ற ஆசையெல்லாம் திராவிடநாடுவிடுதலையடைய வேண்டும். விடுதலை பெற்றமண்ணில் நான்சாக வேண்டும். விடுதலையை நான் இருந்து பார்க்க வேண்டும் என்பதுதான்.

வெள்ள நிவாரண நிதிக்காக—'தமிழசத்திற்கு பதினாயிரம், கேரளத்துக்கு ஐயாயிரம், கன்னடத்துக்கு ரூ 2500 ஆகமொத்தம் 17,500 அளித்திருக்கிறார்.

பொறுத்தருள்க

இந்த கிழமை முதல் வரஇருந்த மேயர் முனுசாமியின்; 'அயல் நாடுகளில் ஐம்பதுநாள்" எனும் பயணத் தொடர், அவர் பஞ்சாப் மாநிலம் சென்றுள்ள காரணத்தால் வரவில்லை-

இரு கிழமைகள் கழிந்து அவர் வந்ததும் வரும். சகோதரர்கள் பொறுத்தருள்க.

—ஆசிரியர்.



துப்பறியும் துரைசிங்கம் அருமைநாயகம் எண்ணியதுபோல் இறந்துவிட்டாரா? இல்லையென்ருல், ஜானகியின் அறைக்குள் நுழைந்த அவர் என்ன ஆனுர்? —என்கிற சந்தேகத்தில் நீண்ட நேரம் உங்களை விட்டுவைக்க நான் விரும்பவில்லை!

ஜானகியின் அறயைப் பரிசோதித்தபோது‘, துரைசிங்கத்தின்ங் கண்களில்ஒரு மூலையில் சிதறிக்! காய்ந்துசாயிருந்த இரத்தத் துளிகள் தென்பட்டன. தன் வசமிருந்த பூதக்கண்ணுடி மூலம் அத்துளிகளை ஆராய்ந்து பார்த்தபொழுது அவருக்குச் ப்தேகம் வைந்தது, அவை மனிதஇரத்தமல்லவென்று. அதை அரபடியே சுரண்டி, பத்திரப் படுத்திக் கொண்டுவந்து, வீட்டில் சோதித்தபொழுது, நிச்சயம் அது மனிதத்தமல்லவென்று விள ங்கியது. அப்போதே அவருக்கு, ாஜானகியும் கமலாவும் ஏதேதே ‘சூது’ நடத்தியிருக்கிருர்கள்பஎன்ற சந்தேகம் உண்டாயிற்று. அவர்களைப்பற்றித்தான் எங்களூரில் எல்லோருக்கும் தெரியுமே!

கமலநாதன் உண்மையில் கொலை செய்யப்பட்டிருக்கமாட்டான்—அவனைக் கொலை செய்ததாகச் சொல்லி வேண்டுமென்றே ஆபத்தில் தன்னைச் சிக்கவைத்

:- தொடர்கதை -:

துக்கொண்டிருக்கிருன் ஜானகிராமன்—இவ்வளவு தூரம்துணிவோடு இக்காரியம் செய்யவேண்டிய அவசியம் என்ன?—என்று நீண்டநேர யோசனையில் ஆழ்ந்தார் துரைசிங்கம்! ஏதோ நினைவு வந்தவராய், ஜானகியின் பீரோவிலிருந்து கொண்டுவந்த கடிதக் குப்பைகளைப் பிரித்தார்.

அதில் அருணுசலம், முன்பு எழுதினுனே, ‘ஒரே ஒரு தடவை உங்களுடைய பெயர், இந்தியா பூராவிலுமுள்ள பத்திரிகைகளில் வந்துவிட்டால் போதும்......உங்களைக் கட்டியணைப்பேன்! கட்டிலில்...சே! எனக்கு வெட்கமாயிருக்கிறது, மேலே எழுத...” என்பதாக, அந்தக் கடிதம் அவர் கண்ணில்பட்டது. அவர் முகம் மலர்ந்தது. யார் அந்த அருணு? —என்பதற்கு ஏதாவது இருக்கிறதா என்று, அக்கடிதத்தை இப்படியும் அப்படியும் பார்த்தபோது எதுவும் தெரியவில்லை.

பூதக்கண்ணுடியால் அக்கடிதத்தின் பின் பக்கத்தைப் பரிசோதித்த பொழுது, அழுத்தி எழுதப்பட்டதால் பதிந்த சில வார்த்தைகள், கடிதத்தின் வரிகளுக்கிடையே தென்பட்டன. மிகவும் சிரமப்பட்டு அந்த வார்த்தைகளை பொறுக்கினுர், துரைசிங்கம்.

பாரதமாதா’பாலகான விநோத சபாவின் கதாசிரியர் பண்டிட் பரமு, எழுதும்போது, கொஞ்சம் அழுத்தியே எழுதுவார். அதனுல் அவர் முதல் தாளில் எழுதிய எழுத்துக்கள் அடுத்தத் தாளிலும் பதிந்திருக்கின்றன. அத் தாளிலே, ஜானகிக்குக் கடிதம் எழுதியனுப்பியிருந்தார்கள். அக கடிதத்தின் பின் பக்கத்தில் பூதக் கண்ணுடியை வைத்துப் பார்த்தபோது தலைகீழாக யிருந்தன, சில வார்த்தைகள். அவைகளை வெகு சிரமப்பட்டு பொறுக்கி எடுத்துக் கொண்டார். அந்த முயற்சியின் விளைவாகப் பின் வரும் வாக்கியங்கள் கிடைத்தன.

“ஆமாடி! அதிரூபவல்லி...
உன் அழகு ஒரு வலை...நான்
ஒரு ஈ...”

“ஆகா! நீரா, ஈ! சேச்சே;
நாதா! தங்களை ஈயென்று
சொன்னுல், என் பதிவிரதா
தர்மம் கெட்டுவிடும்...அப்படி
யெல்லாம் சொல்லாதீர்கள்...’

இந்த அலங்கோல வார்த்தைகளை, தான் ஒரு நாள் நாடகத்தில் கேட்டது, நினைவுக்கு வந்தது. பண்டிட் பரமு நடத்திய நாடகத்தின் வசனங்களைப் பலர் மறந்திருக்க முடியாது. ஏனெனில் அது தமிழே அல்ல! ஓரளவு தமிழறிவுள்ளவர்கள் அந்த நாடகங்களைப் போய்ப் பார்த்தால், வச

அண்ணல்

னமா இது — பாட்டா அது, சேச்சே, என்று காறித்துப்பிவிட்டுத்தான் வருவார்கள்!! எதானுலும் இலேசில் மறக்காதவரான துரைசிங்கத்துக்கு அந்த வசனங்கள் நினைவுக்கு வந்ததும், மேற்படிக் கடிதத்தை எடுத்துப் பத்திரப்படுத்திக்கொண்டு, தன்னுடைய அறையை மூடிச் சாவியைக் காவற்காரனிடம் கொடுத்துவிட்டு, ஒரு பெட்டியுடன் கிளம்பிவிட்டார்.

துப்பறியும் தொழிலில் ஈடுபட்டிருந்தவராதலால், எங்கே போகிறேன், எப்போது வருவேன் என்று யாரிடமும் சொல்லமாட்டார். வேலைக்காரனும் அவரைக் கேட்கமாட்டான். அவரிடம் ஒரு பழைய காலத்துத் தோல் பெட்டியொன்று உண்டு! அதை எடுத்துக் கிளம்பிவிட்டால், அவர் ஏதோ வேலையாகப் புறப்படுகிருர் என்று புரிந்துகொள்வான். அவர் கிளம்பும்போது இரவு மணி ஒன்பது. நேராக சென்னைக்கு ஒரு டிக்கட் வாங்கிக்கொண்டு, ரயிலேறிவிட்டார் துரைசிங்கம். அருமைநாயகம் அவர் வீட்டை தேடிவந்தபோது வேலைக்காரனும் அவன் மனைவியும் ‘ஓ’ வென்று அலறிக்கொண்டே வீட்டைவிட்டுப் போனதாகக் கேள்விப்பட்டாரல்லவா? வேலைக்காரன் தம்பி வேற்றூரிலிருந்தான். அவன் இறந்துவிட்டதாகச் செய்தி வந்ததால் அவர்கள் அழுதார்கள்.

இதெல்லாம் புரியாத காரணத்தால் கமலாவின் பேய்தான் அடித்துவிட்டது துரைசிங்கத்தை என்று தீர்மானித்து யாரிடமும் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தானுகவே வேதனைப் பட்டுக் கொண்டிருந்தார், அருமைநாயகம்!!

இரயிலேறிய துரைசிங்கம், சென்னையை அடைந்தார். கமலா போன்ற ஆட்கள் சென்னைக்கு வந்தால் எங்கே சுற்றுவா கள் என்பது அவருக்குத் தெரியாதா?

ஜாலி மைனர்களுக்கு ஏற்ற இடம் மாலையில் பீச்சும் மனமகிழ்வூட்டும் சினிமாவும்தானே!!

ஒன்றுவிடாமல், ஓரிரு நாட்கள் அலைந்தார். அருமைநாயகம் விடுத்த வேண்டுகோளைவிட அவருக்கு அவருடைய மகள் பாலாமணி படுகின்ற வேதனைதான்—மனக் கண்முன் வந்தது. அதோடு காப்பாற்றவே முடியாதென்று நினைத்த ஜானகியை மீட்டிட முடியும் என்பதால் அதைச் சீக்கிரம் செய்ய வேண்டும் என்கிற அவசரமும் கொண்டார்.

அவனைக் காப்பாற்ற வேண்டுமென்ருல் முதலில் கமலநாதனையல்லவா கண்டுபிடித்தாக வேண்டும்? எப்படி அவனைக் கண்டு பிடிப்பது? தேடித் தேடி அலுத்த நிலையில் ஒருவேளை அவன் எங்காவது பம்பாய், கல்கத்தா போயிருப்பானே என்கிற எண்ணம் வந்தது!

கல்கத்தா என்று எண்ணியதும், அவருக்குப் பழைய நினைவுகள் வந்தன. போலீஸ் இலாகாவில் அவருக்கு உத்தியோகம் கிடைத்த கொஞ்ச நாளைக்கெல்லாம் அவரை சென்னை சர்வீசிலிருந்து அகில இந்திய சர்வீசுக்கு மாற்றினுர்கள். கடந்த போர் முடிந்த பிறகு கல்கத்தா முதலிய வங்காளப் பகுதிகளில பாகிஸ்தான் கோரிக்கையின் காரணமாக வகுப்புக் கலவரங்கள் மூண்டனவல்லவா? அதை யடக்கத் தமிழ் நாட்டு அதிகாரிகளே பட்சபாதமில்லாதவர்கள் என்று கருதி அகில இந்திய அரசு, பலரை அங்கே போகச் செய்தது. அப்படிப் போனவர்களில் ஒருவர் துரைசிங்கம். அவர் அங்கே போலீஸ் அதிகாரியாகப் பணியாற்றியபொழுது அவருக்கு மிகவும் அந்தரங்கமான டிரைவராயிருந்தான் ஆபிரகாம் என்று

௭-ம் பக்கம் பார்க்க

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது! வாங்கிவிட்டீர்களா?

படித்தீர்களா?
வான்மதி
மாத இதழ்

ஆசிரியர்: ஆரூர். ஆனந்தன் பி. எஸ்சி. பி- டி டி. எம். ஐ. டி

பன்மொழிப்புலவர் அப்பாத்துரையார், கவிஞர்கள் வாணிதாசன், சுப்பு ஆறுமுகம், அகிலன், சாண்டில்யன், ஜெகசிற்பியன், வாசவன், கோவிமணிசேகரன். சோமதி சுவாமிநாதன் ஆகியோரும் பலரும் எழுதுகின்றனர்.

இருபதே காசு! இணையற்ற விருந்து!

விற்பனையாளர்கள் தேவை.

“வான்மதி”
சென்னை .33.

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 1 வெள்ளி 8-8 61 கதிர் - 23

திருமணம் செய்யுமா!

எழுபது வயதுக்கு மேற்பட்ட கிழவர்களுக்கு உதவித்தொகை அளிக்கப் போகிறதாம் சென்னை அரசு,

ஆதரவற்ற நிலையிலிருக்கும் அனுதைகளுக்கு மட்டுமே, இந்தத் தொகை அளிக்கப்படுமாம்.

மாதா மாதம் ரூபாய் 15 வீதம் அளிக்கலாமென்றும் அதன் மூலம் ஆண்டொன்றுக்கு 10 லட்ச ரூபாய் மட்டுமே செலவாகுமென்றும், அறிவிக்கிருர் அமைச்சர் வெங்கட்டராமன்.

ஐக்கிய மாநிலத்தில் ஏற்கனவே இத்திட்டம் அமுலாக்கப்படுகிறதாம்! அதனுல் இதனை நிறைவேற்றுவதில் இங்கே எவ்வித சிரமமும் இருக்காதெனக் கருதுகிருர்கள்!!

வயதாகி, வாழ முடியாமல் பிச்சையெடுக்கவும் திராணியற்றுத் திண்டாடும் பெரியவர்களுக்கு உதவி செய்வதென்பது வரவேற்கக் கூடிய ஒன்றுகும். அரசு போட்டிருக்கும் 10 லட்சத்தைவிடக் குறைவாகவே செலவாகக்கூடும். ஏனெனில் கிழவர்களான அனுதைகள், அதிகமிருக்கமாட்டார்கள் நமது மண்ணில்.

* * *

இப்படியொரு திட்டத்தைச் செய்ய முடிவெடுத்திருக்கும் சென்னை அரசுக்கு, இச்சமயத்தில் நாம் ஒரு யோசனையைக்கூற விரும்புகிருேம். சருகுகளுக்கு உதவுவது மனித நீதிதான்! அதே போல வாழ்க்கையில் புகும் அரும்புகளுக்கும் உதவ முன்வர வேண்டும், நமது அரசு!!

ஒவ்வொரு ஊரிலும் கிராமத்திலும் பிற்பட்ட வகுப்பில், வயதான பிறகும் கலியாணம் செய்ய 'பணம்' இல்லாத காரணத்தால், திருமணமாகாத நிலையில் திண்டாடும் ஆண் பெண்களுண்டு.

இந்தப் பணம் இல்லாததாலேயே தங்களை 50 ரூபாய்க்கும் 100 ரூபாய்க்கும் ஆயுள் முழுதுக்கும் சீட்டு எழுதிக் கொடுத்துவிட்டு பண்ணையாளாகி விடும்முறை, தஞ்சை போன்ற மாவட்டங்களில் வாழும், ஆதித் திராவிடப் பெருங்குடி மக்களிடம் உள்ளது.

இப்படிப்பட்டவர்களுக்கு அந்தந்த ஊர் பஞ்சாயத்து சிபார்சு செய்தால், திருமணத்துக்கென்று ஒரு உதவித் தொகை அளிகக முன்வரவேண்டும் அரசு.

உதாரணத்துக்கு ஒரு திருமணத்துக்கு ரூ. 100 என்று அளித்தால் கூட மொத்தம் 20, 30 லட்ச ரூபாய்க்குமேல் செலவு வந்துவிடாது! சுமார் 80 கோடி ரூபாய் வரவு செலவு செய்யும் ஒரு அரசுக்கு இது ஒரு பெரிய செலவும் அல்ல!!

இலட்சக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் செலவு செய்பவர்கள், அரசை நாடப் போவதில்லை. பெண்களையும் ஆண்களையும் பெற்று வளர்த்துவிட்டு அவர்கள் வயதுக்கு வந்ததும் காசில்லாத காரணத்தால் 'கழுத்தும் மாலையுமாக' காண முடியாது தவிக்கும் குடும்பங்களுண்டு.

ஒரு ஆண்டுக்கு சுமார் 30,000 திருமணங்களுக்குமேல் செலவு செய்ய வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்படாது.

வீணுகும் வரிப்பணத்தில் ஒரு சில லட்சங்களை இப்படியும் செலவு செய்யலாம்! எத்தனையோ 'குடும்பங்கள்' உருவாகும்—பெரு மூச்சுகள் குறையும்!!

* * *

சமூகத்தின் சகலவிதமான பிரச்னைகளையும் ஏற்றுக் கொள்ளத்தான் அரசு.

ஆனுல் வரியை வாங்கி செலவழிப்பதும், அதிகாரம் செலுத்துவதும் தான் அரசுவின் கடமையென்று கருதப்பட்டு வருகிறது.

அந்த நிலைமை மாறி, ஒவ்வொரு மனிதருடைய தொல்லைகளையும் துடைக்க, அரசு திட்டங்கள் போட வேண்டும்.

தேர்தல் சமயத்தில் வெளியிடப்படும் 'தேன் துளி'யாகப் போய் விடாமல், உருப்படியானவைகளையும் செய்ய வேண்டும்.

அந்த வகையில், இந்த யோசனையை நாம் வைக்கிருேம்.

செய்ய முன்வருமா! திட்டம் போடுமா!!

கானல் நீரா!!

அறிஞர் அண்ணு அவர்கள் ஒப்பாரும் மிக்காரும் அற்றவர் என்பதை நாடு அறியும். நல்லவர் உள்ளம் அறியும். அவரைக் குறைகூற வேண்டும் என்னும் நோக்கத்தையே இலட்சியமாகவும், அண்ணுவுக்குக் கிடைக்கும் புகழ் தனக்குக் கிடைக்காதா என்னும்அற்பஆசையின் காரணமாகவும் 'தமிழ்நாடு மட்டும் போதும்; திராவிடநாடு கிடைக்காது; அது கானல்நீர் என்றெல்லாம் பேசியும் எழுதியும் வருகின்றனர் ஒரு சிலர். இந்தத் துறையில் முன்னேடியாக இருக்கும் புதுக் கட்சிக்காரர்களின் புலம்பலைக் கேட்ட நாம், அரசியலின் பழங்கால வரலாற்றைச் சிறிது எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டு உள்ளோம்.

'தமிழ் நாடு' கேட்பது நமக்கு ஒன்றும் புதியதல்ல. தமிழ்நாடு தமிழருக்கே என்று முழங்கியவர்கள் நாம்தான். திருவாரூர் மாநாட்டில் இருந்து, முழங்கச் சொல்லிவந்த தலைவர் மூலையில் முடங்கிவிட்டார் அவரது இயலாமையினுல்! நாம் அதைக்கண்டு ஆத்திரம் அடையவில்லை, அனுதாபப்பட்டோம், அதே பாதையில் நம்மிடம் இருந்து பிரிந்து

தென்னவன்

சென்றவர்கள் செல்கிருர்கள். அதுபற்றிக் கவலை இல்லை நமக்கு, காரணம். அரசியல் விழிப்பு—விடுதலை வேட்கை—உரிமைக் கிளர்ச்சி ஆகியவை தனி மனிதன்போவதால் மறைந்து விடுபவை அல்ல!

திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் 'தமிழ் நாடு' என்று ஒரு தாளிதழ் நடத்தி, தனித்தமிழ் நாடு கேட்டுப் பார்த்து. 'கடை விரித்தேன், கொள்வார் இல்லை' என்று கூறிவிட்டு அரசியலை விட்டே ஒதுங்கி விட்டார்.

ம. பொ. சி. தலையைக் காங்கிரசு கட்சியிலும் காலைத் தமிழரசுக் கட்சியிலும் வைத்துக் கொண்டு காங்கிரசுத் தாய்க் கழகம், தமிழரசு சேய்க் கழகம் என்றெல்லாம் பிரச்சாரம் செய்தார். கண்ட பலன் 'மாலவன்' குன்றத்தில் இருந்து 'வேலவன்' குன்றத்துக்குத் போனதோடு சரி, வேறு ஒன்றும் இல்லை!

ஆதித்தனுர் இலங்கையின் பகுதிகளையும் சேர்த்துத் தனித் தமிழ்நாடு என்று பேசிவருகிருர், அத்தோடு நிற்கிறது அவரது கட்சி!

இந்தியா என்பது ஒரு நாடு அல்ல; பல இனங்களைக் கொண்ட ஓர் உபகண்டம். இந்த உண்மையைப் பலர் புரிந்து கொள்ளாமல் அடிப்படையிலே தவறு செய்கிருர்கள். அதற்கு எடுத்துக் காட்டாகக் காங்கிரசு தேசியத் தோழர்கள் கதர் நூலால் இந்த இந்திய உபகண்டத்து மாநிலங்களைக் கட்டினுர்கள். நூல் அறுந்ததே தவிர தேசியம் ஏற்படவில்லை! காங்கிரசுகாரர்கள் செய்த தவறையே 'தேசியம்' என்னும் பேரால் புதுக் கட்சிக்காரர்கள் செய்கிருர்கள்.

திராவிடத் தனிநாட்டுக்கோரிக்கையை விட்டு, 'புதுமுகாம்' அமைத்து உள்ளார்கள்புதுக்கட்சிக்காரர்கள். தனிப்பட்ட பகையை அரசியலில்கலப்பதுகூடாதுஎன்று புரியாதவர்கள் அவர்கள். இல்லாத கொள்கைகளுக்குப்பொல்லாத கட்சி நடத்துகிருர்கள்! பரிதாபம்!!

திராவிடநாடு கேட்பது அரசியலில் ஏற்பட்ட ஏமாற்றத்தினுல் அல்ல. பணக்காரர்கள் பணம் தருவார்கள் என்பதால் அல்ல; திருநாடு கேட்பது நமது பிறப்புரிமை; பாதுகாப்பு உணர்ச்சி; தன்மான உணர்வு; கொள்கைப் பிடிப்பு;

தங்க கூண்டு என்ருலும் கிளி தன் இச்சையாகத்தான் வாழ விரும்புகிறது. குஞ்சைக் குத்த வரும் பருந்துடன் தாய்க்கோழி எதிர்க்கிறது.

வயலுக்கு ஒரு வரப்புப்போல, வீட்டுக்கு ஒரு தாழ்ப்பாள் போல, ஒன்பது கோடி திராவிடரின் வாழ்வுக்கு ஒருபாதுகாப்பு 'திராவிட நாடு' கேட்பது. நாம் மொழியால் தமிழர்; இனத்தால் திராவிடர்.

கல்தோன்றி, மண்தோன்ரு காலத்து, வாளோடு முன்தோன்றிய மூத்த குடியினர் நாம். ஒல்காப்புகழ் பெற்ற தொல்காப்பியம், நுண்மாண் நுழைப் புலமையைக் காட்டும் திருக்குறள் இன்னும் பல ஏடுகளின் சொந்தக்காரர்கள் நாம். அப்படி எல்லாம் வாழ்ந்த இனம் இன்று வேறு ஓர் இனத்தால் அமுக்கி வைக்கப்பட்டு உள்ளது. இந்த நிலையில் திராவிடநாடு கேட்கிருேம் நாம், தமிழ்நாடு மட்டும் கேட்கிருர்கள் ஒருசிலர். அதை நாம் எதிர்க்கவில்லை, கர்ரணம் அரையணுவில் காலணு இருப்பதைப்போல திராவிடத்தில் தமிழ்நாடு இருக்கிறது!

பிழைகள்

'அறப்போரில்' பல இடங்களில் எழுத்துப் பிழைகள் காணப்படுவதைத் தோழர்கள் எழுதியிருக்கிருர்கள். இந்த இதழ் 4-ம் பக்கத்தில் கூட 'பொறுத்தருள்க' என்றிருக்க வேண்டியது 'பொருத்தருள்க' என்று வந்திருக்கிறது. பிழை ஏற்படாமலிருக்க ஆவன செய்துவருகிறேன். மன்னியுங்கள்.

ஆ-ர்

நான் கண்ட அண்ணா

அரங்கண்ணல்

உண்மையை வெட்கமில்லாமல் உங்களிடம் சொல்கிறேன்—அண்ணாவைப் பற்றி எழுத எனக்கு அச்சமா யிருக்கிறது! "களிப்போடு அல்லவா நீ எழுத வேண்டும் நம் காவலர் கோவைப் பற்றி, கலக்கமடைகிறேன் என்கிறாயே?" என்று என் சகோதரர்கள் கேட்கக் கூடும். என் செய்வேன்? அண்ணா!—எனும் இந்த மூன்றெழுத்து முக்கனியைப் பற்றி, அருவி போல, கவிதைகளைப் புனைவோருண்டு. பழச் சுளைகளை எடுத்துவைப்பது போல கட்டுரை தீட்டும் வல்லவர்களுண்டு. ஆனால், என்னுடைய நிலை, அதுவல்ல.

அண்ணா எனும் பெயருக்கு முன், நான் நிலவுக்கு முன் மின்மினிபோல, சூரியனுக்கு முன் தீக்குச்சிபோல. பயம் பரவுகிறது, கரங்களில். எதை எழுதுவேன்?

நான் கண்ட அண்ணன் ஏட்டுக்குள் அடங்கக் கூடியவரா!—அல்லது அவரைப் பற்றி எழுத எனக்குத் தெரிந்த எழுத்துக்கள் தான் போதுமா! எனினும், அவர் 'கொடுத்த பேனா' கையிலிருக்கிறது எனும் தைரியத்தில், பெருமூச்சுகளை வானவெளிக்கு அனுப்பிய வண்ணமே, எழுத முயலுகின்றேன்.

*

காலக் குயில், என்றோ ஒரு தடவை கூவும், மனிதர்கள், புதுப் பிறவி எடுப்பார்கள்!! என்றான், கவிஞன். குயில் சாவ அதன் குரலொலி கேட்டு மனிதர்கள் புதியவர்களாக மாறிடும் பாங்கினைத் தமிழகம் என்றுதான் கண்டது! கடும் வார்த்தைகளைக் கொட்டி, ஆதிக்கபுரிகளைச் சாய்த்த அரசியல்வாதிகளுண்டு; மேசைகளைத் தட்டி மேனாமினுக்கிகளை ஒழித்த உத்தமர்கள் உண்டு; அக்கிரமம் கண்டீரோ என்று ஆர்ப்பரித்து இரத்தம் ஓடும் கள பலிக்குக் காளைகளை இழுத்துச் சென்ற கர்ச்சனை புரிச்சிங்கங்கள் உண்டு. அண்ணா, அப்படியல்ல! கீதக் குரலால், கானத் தொனியால், கனிரச நடையால் மனிதர்களைப் புதுப் பிறவி எடுக்கச் செய்த குயில்!! ஆரியருடைய புரட்டுளை அம்பலமாக்கிய ஆரம்பக் காலச் சுயமரியாதைத் தொண்டராயிருந்த போதும்சரி, அதற்குப் பிறகு அய்யாவுக்கு வக்காலத்துவாங்கிடும் முதல் தொண்டனாயிருந்த போதும்சரி, அவருடைய குரலில் கடுமை தென்பட்டாலும் கூட அது குயில் கூவும் நாதமாகக் கருதியதுநாடு, என்பதை அனைவரும் அறிவர். "அண்ணாதுரை, தாக்கித்தான் பேசுகிறார்! ஆனாலும், எவ்வளவு அருமையாயிருக்கிறது, தெரியுமா!!' என்றே அனைவரும் பேசுவர் அப்போது எனக்கு பதிமூன்று வயதிருக்கும். காலை முதல் மாலைவரை காந்தி ஜபம் செய்கிறவனா யிருந்த நேரம். நான் படித்த திருத்துறைப் பூண்டியில் அண்ணாவைப் பற்றி, "நன்றாகப் பேசுவார்" என்று என் காங்கிரஸ்காரர்கள் சொன்னதைக் கேட்டு, நானும் வேடிக்கைப் பார்க்கப் போயிருந்தேன். மறைந்த பன்னீர்செல்வம் அவர்கள் அதற்கு ஒருவார காலத்துக்கு முன்புதான், இலண்டனுக்குப்போகும் வழியில், அமான் கடலில்விமானம் விழுந்து, மடிந்தார்கள். அவரைப்பற்றி அண்ணா பேசுகிறார், அப்போது கவிதைநயம் கலக்க, அவர் சொன்னசொற்கள் இன்றும் காதுகளில்ரீங்காரம் கொட்டுகின்றன. என் கவனத்தை விட்டு இன்றும் நீங்காத அந்த வரிகள், "அமான்கடலே எங்கள் சீமான் செல்வம் எங்கே? எங்கே! என்று கேட்கிறோம். கொடும் திமிங்கிலங்களையும் கோரச் சுறாக்களையும் தன்னகத்தே கொண்டஅந்த அமான் கடல், அலைகளையேப்பதிலாகத் தருகிறது!! பேச்சு கேட்டமக்கள், ச்சுச்சு கொட்டினர்! தூரத்தே நின்று கூட்டத்தில் முண்டியடித்துக்கண்டேன் அண்ணாவை!! அதற்குப் பிறகு மூன்றாண்டுகளுக்குப் பிறகு, திருவாரூரில், ஒரு திரைப் படக் கொட்டகையில், ஒரு கூட்டம். அண்ணா பேசி விட்டு வந்து அமர்ந்தார். அவரைக் காண்பதற்குச் சகோதரர் கருணாநிதியுடன் நான் போயிருந்தேன். கருணாநிதியைக் கண்டதும் அண்ணா, "ஓ! நீயா? வா! வா! நல்லாப் படிக்கிறீயா? நல்லாப்படிக்கணும்! நீ எழுதிய கட்டுரை வந்தது. படி! பிறகு எழுதலாம் என்று சொன்ன அந்தக் கனி

வானச் சொற்களை, என்னால் மறக்க முடியவில்லை. தூரத்தே! மாற்றார் தோட்டத்து மனோரஞ்சிதமாக அன்று தென்பட்டார்! முள்ளில்லாத ரோஜவாக நான் இரண்டாம் தடவைக்கண்டேன், அவரை!! மூன்றாவது தடவையாக எந்தத் திருத்துறைப் பூண்டியில் அவர் பேச்சை முதன் முதலில் கேட்டேனோ, அங்கேயே அவரைக் கூட்டத்துக்கு அழைத்தேன். முதல் முறை வருவதாகச் சொல்லி, வராததால், ஏககோபம் அதனால் அவர் ரயிலில் வந்து இறங்கிய பிறகே, சுவரொட்டிகள் ஒட்டி, மெகபோன்மூலம் கூவி, கூட்டம் கூட்டினோம். பலத்த எதிர்ப்பு. ரயிலடி யிலிருந்த ஒரு ஓய்வு விடுதியிலிருந்து, கூட்டம் நடந்த முள்ளியாற்றுக்கு ஊர்வலமாக அண்ணாவை அழைத்துச் செல்ல ஏற்பாடு. காரோ! பீட்டனோ அல்ல!! ஏது, எங்களிடம்? அண்ணாவிடம் போய் கால் நடையாகவே ஊர்வலம் போக வேண்டும் என்றோம்—அவர், சிறுவனான நான் சொன்னதைக் கேட்டு, "ஓ! புறப்படு!!" என்று சொன்ன போது, என் உள்ளமே அவரிடம் அடைக்கலம் புகுந்தது. ஊர்வலமாக நாங்கள் வருவதையறிந்து, உள்ளூர் காங்கிரசுக்காரர்கள் கடைத் தெரு முழுவதிலும் இருபக்கத்திலும் காங்கிரசுக் கொடிகளைக் கட்டி வைத்திருந்தார்கள். எனக்கு உள்ளுக்குள் பயம்! ஏனெனில் அவ்வூர் பெரிய காங்கிரஸ் கோட்டை அப்போது. வசதியுள்ள செட்டியார்கள் பலர் காங்கிரசில். கூட்டம் ஆரம்பித்ததும் அண்ணா, "முதலில் இந்த ஊர் காங்கிரசுக்காரர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் வருவதையறிந்து மகிழ்ச்சிக்கு அடையாளமாக இருபக்கத்திலும் கொடி கட்டி என்னை வரவேற்ற அவர்களது பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன்," என்று ஆரம்பித்தார். கேட்க வேண்டுமா, பிறகு? இந்த ஒரு சொல் போதாதா? எமக்கு; ஒரு ஆண்டுக்கு இதை வைத்தே பதில் சொல்லமுடியுமே எதிரிகளுக்கு!

சுயமரியாதை இயக்கத்தில், பச்சை அட்டைக் குடியரசு — மா. சிங்காரவேலர் கட்டுரை — கைவல்யம் ஆராய்ச்சி—அழகிரி அண்ணனின் வெட்டு ஒன்று

(12-ம் பக்கம் பார்க்க)

5-ம் பக்கத் தொடர்ச்சி

பெயரை மாற்றிக் கொண்ட தங்கமுத்து—அதாவது லைலாவின் தந்தை.

சிறு குழந்தையாயிருக்கும்போது லைலா துரைசிங்கத்தின் வீட்டில்தான் அதிகமாயிருப்பாள் அநேகமாக ஐந்தாறு வயதுவரையில் அவள் அங்கேதான் வளர்ந்தாள் என்று சொல்லலாம். பிறகு துரைசிங்கம் சென்னை சர்வீசுக்கு வந்துவிட்டார்.

ஏந்த கொஞ்ச நாள் வரையில் ஆபிரகாம் கடிதம் எழுதிக்கொண்டிருந்தான். பிறகு அதுவும் நின்று போய்விட்டது...

சரி, கல்கத்தா போவோம் ஆபிரகாமையும் அவர் மகளையும் பார்க்க முடியாவிட்டால், நமது பழைய நண்பர்கள் பழகிய இடங்களையாவது பார்த்துவிட்டு வருவோம் என்று கல்கத்தாவுக்குக் கிளம்பினார். ஆண்டுகள் ஒன்று, இரண்டா, அவர் கடைசி தடவையாக பதினாறு பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு கண்ட கல்கத்தா மாறிப் போயிருந்தன. அவர் அங்கேயிருந்தபோது ஒரு கதாசிரியர் நெருங்கிய நண்பராயிருந்தார். அவர்வீட்டைத் தேடிப்பிடித்து அந்தவீட்டின் ஒருஅறையில் போய்த் தங்கினார். அவர் தங்கியிருந்த அறைக்குப் பக்கத்தில்தான், அவர் யாரை சந்திக்க முடியுமோ என்று சந்தேகப்பட்டுகொண்டு வந்தாரோ, அதே லைலா பழைய இடத்தை விட்டுக் கிளம்பியதும் குடி வந்திருந்தாள்,

தன் தந்தை ஆபிரகாமுடன் நம்முடைய சென்னை நகரைப் போலல்ல கல்கத்தா! ஒரு பெரிய மாடிவீட்டுக்குள் புறாக்கூடுகளைப் போலப் பல அறைகளிருக்கும். ஒவ்வொரு குடும்பமும் இயங்கும். அங்கே வந்த இரண்டொரு நாளைக்கெல்லாம் தற்செயலாக அவரும் ஆபிரகாமும் சந்தித்தனர், பழைய பாசம் படர்ந்தது ஆபிரகாமுக்கு. தான் சிறுவயதில் கண்ட லைலா படித்துத் தேர்ச்சியடைந்து பணம் சம்பாதித்து அப்பனைக் காப்பாற்றும் யுவதியாக வளர்ந்திருப்பதைக் கண்டபோது, அவராலேயே நம்ப முடியவில்லை! அக்குதொக்கற்ற அவருடைய மனதில் சொல்லொணா ஆனந்தம் உண்யிற்று. அவரைக் கண்ட அந்த இரண்டுமூன்று நாட்களும் ஆபிரகாம் குடிக்கச் செய்வதைக்கூட மறந்தான். அவர் கூடவேயிருப்பது அவனுக்கு ஆனந்தமாயிருந்தது.

அலுவலகம் விட்டு வீட்டுக்கு வந்ததும் லைலாவும் துரைசிங்கத்திடம் வந்துவிடுவாள். இளமலர் பேசப்பேச தன் மகள் பேசுவதைப்போல் எண்ணியெண்ணி இறும்பூதெய்வார் துரைசிங்கம்!

கல்கத்தாவில் நாடகங்கள் அடிக்கடி நடக்கும். அதிலும் வங்காள நாடகங்கள் பார்க்க மிகவும் அருமையாயிருக்கும். அன்றைய தினம் மிகவும் வலியுறுத்தி துரைசிங்கத்தையும் அழைத்துக்கொண்டு லைலா, ஒரு நாடகத்துக்குப் போயிருந்தாள். ஆபிரகாம் வீட்டுக்கு காவலிருந்தான்.

* * *

கமலா தன் எதிரே விரித்த பிச்சுவாவுடன் ஒருவன் வந்ததைக் கண்டதும் ஆடவில்லை, அசையவில்லை. ஆ, ஊ என்று கூச்சல் போடவில்லை. அவனுக்கு சில சமயங்களில் அசாத்தியமான தைரியம் வந்துவிடும். அவனுடைய "ஸ்பெஷல்" குணமே அதுதான்! விளைவைப் பற்றி எண்ணமாட்டான். வீம்பையே பெரிதாகக் கருதுவான். சினிமாவில் வந்த திருட்டைப் போலச் செய்ய முடியும்!— என்று நண்பர்களிடம் பந்தயம் கட்டினானே, அதுதான் அப்போது அவன் மனதிலிருந்தது. உயிருக்கே உலை வரும்போது கூடவா ஒரு மனிதன் வீம்பைப்பற்றி எண்ணுவான் எனக் கேட்கிறீர்களா? அதுதான் கற்பனைக் கமலாவின் 'ஸ்பெஷல்' குணம் என்றுசொன்னேனே!!

உருவிய பிச்சுவாவுடன் உள்ளே நுழைந்தும் பேசாமல் உட்கார்ந்திருக்கும் கமலாவைக் கண்டதும் திருட வந்தவனுக்கே கொஞ்சம் தயக்கம் ஏற்பட்டது. என்னடா, கூச்சல் கூடப் போடாமல் நாம் வந்த வழியைப் பார்த்தவனாயிருக்கிறானே, என்று நினைக்க அவனுக்கே 'திகீர்' என்றது. ஒருவேளை ஆள் செத்துகித்துப் போய்விட்டானோ என்று எண்ணியவனாய், எதிரில் வந்து நின்று கொண்டு,

"ஏய்!" என்றான்.

"ஏன்! என்ன வேண்டும்?"' என்று மிகவும் அமைதியோடு கேட்டான் கமலா.

"ஊம்! நான் யார் தெரியுமா? திருடன்!!" என்றான் திருட வந்தவன்.

"ஆமாம்! தெரியும்...", என்று சொல்லிவிட்டு, "இப்படி உட்கார்; உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேசவேண்டும்...", என்றான் கமலா.

ஒன்றும் புரியாதவனாய், திருட வந்தோம் இவன் உட்காரச்சொல்கிறானே என்று மிரண்டவனாய் உருவிய பிச்சுவாவை மடக்காத நிலையில் எதிரே உட்கார்ந்து கொண்டான் வந்தவன்.

"ஆமாம்! நீ உட்கௌஸ் நாவல் படித்திருக்கிறாயா?"

"என்னது! உட்கௌசா, அதெல்லாம் எனக்குத் தெரியாது..."

"அப்படியா! ஆமாம். நீதான் திருடனாச்சே, உனக்கெப்படி உட்கௌஸ் எனும் பிரசித்தி பெற்ற ஆசிரியனைத் தெரியும். அவன் ஒரு நாவல் எழுதியிருக்கிறான்—அதில் இப்படித்தான் ஒரு கட்டம் வருகிறது..."

"யோ! நான் திருட வந்தவன். சாகசமாகப் பேசி என்னை மாட்ட வைக்க நீ தந்திரம் பண்றே. இதோ பாரு! என்ன வைச்சிருக்கே காட்டு......நான் போகணும்"

"ஏம்பா! பெரிய திருடன்கிறே. உனக்கு எப்படித் திருடறதுன்னு கூடத் தெரியலியே...மான்சிங் கேள்விப்பட்டிருக்கியா, மான்சிங் பெரிய கொள்ளைக்காரன். உன்னைப்போல ஐம்பது நூறுக்கு அவன் தொழில் பண்ணமாட்டான், ஒரே ராத்திரி இலட்சம் இலட்சமாகக் கிடைக்கும்..."

"அதுக்கெல்லாம் கொடுத்து வைச்சிருக்கணுமுங்க ... என்னமோ! இவ்வளவுதான் ஈசுவரன் எனக்குப்படி அளக்கிறான்..."

"அவன் எப்படி அவ்வளவு பெரிய திருட்டுகளை நடத்துவானும் தெரியுமா?"

"தெரியாதுங்க! எனக்குக்கூட ஆசைதான் — அதையெல்லாம் தெரிஞ்சிக்கணும் என்று. ஆனால் சொல்லத்தான் யாருமில்லே... ஏங்க உங்கட்கு அந்த மான் சிங்கைப்பத்தி ரொம்பத் தெரியுமா... நாள் முழுதும் கஷ்டப்பட்டாக்கூட எனக்கு மாதத்திலே இரண்டு மூன்று இடத்திலே தாங்க 'தொழில்' கிடைக்குது... அப்பா! எனக்கு மட்டும் ஒரு இலட்ச ரூபாக்கிடைச்சா, இந்தத் தொழிலையே விட்டுடுவேன். எங்கேங்க கிடைக்குது?..."

"ஊம்! கிடைக்காமல் எதுவும் போயிடாது. திருடறதுக்கு முந்தி, ரொம்ப தந்திரமா நடக்கணும். மொதல்லே, இப்படி உன்னைப் போல அசிங்கமா 'டிரஸ்' பண்ணக்கூடாது. மான்சிங்கைவிட அப்பனெல்லாம் இருக்கான் அமெரிக்காவிலே! ஆள் சும்மா டிப்டாப்பா இருப்பான்...அப்படியே ஒரு பாங்குக்குள்ளே நுழைவான்...அபேஸ்! லட்சம் லட்சமா அவன் கையிலே இருக்கும்..."

"ஆமாங்க! இவ்வளவு நல்லா திருட்டுகளைப் பற்றிச் சொல்றீங்களே...ஏங்க! நீங்களும் என்னைப் போலத்தானா..."

"ஆமாம்! உலகத்திலே ஒய்யாரமா வாழ்ற ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு விதத்திலே 'திருடி'த்தான் அந்த வாழ்வைப் பெற முடிகிறது என்கிறார் பெர்னாட்ஷா... உனக்குத் தெரியுமா, எங்க தமிழ்நாட்டிலே கவிஞர் கண்ணதாசன்னு ஒருத்தரு ஒரு சமயம் திருடினாத்தான் வாழ முடியும். திருடித்தான் புகழ் பெற்றான் ஷேக்ஸ்பியர், ஏன் நான் மட்டும் எழுத்தைத் திருடக்கூடாதுன்னே தைரியத்தோடு கேட்டார்..."

"என்னங்க இது! திருடறதுன்னா பணத்தை நகையைக் கொள்ளையடிக்கிறதுக்குத் தானே பேரு. நீங்க திருட்டு எங்கேயும் நடக்குது...எழுத்தைக்கூடத் திருடறாங்க, அப்படி யிப்படிங்கிறீங்களே?"

"ஆமாம்! ஏழையின் உழைப்பை பணக்காரன் திருடறான்... பொதுமக்கள் நம்பிக் கொடுத்தப் பணத்தை அரசியல் சுயநலவாதி அபகரிச்சு வாழ்றான்...ஆண்டவனைக் காட்டுறேண்டான்னு ஒருத்தன் 'அபேஸ்' பண்றான்...உனக்குத் தெரியாது. எங்க நாட்டிலே கருணாநிதின்னு ஒரு கலைஞரு. பாவம் எத்தனையோ ராப்பகலா கஷ்டப்பட்டு ஒரு கதைஎழுதினாரு அம்மையப்பன்னு நாடகமாகவும் போட்டாருவரு. னம் எல்லாத்தையும் எடுத்துசரு படத்தைத் தயாரிச்சாங்க,ஒரு கம்பெனிக்காரங்க. அதுக்குத் தன் பெயரைக்கூடப் போட்டுக்கிட்டாங்க இரண்டு எழுத்தாளருங்க!...அந்தஇரண்டு பேரிலே ஒருத்தரு இப்பப் பக்தரா வேடம்போட்டு வாழறாரு...இன்னொருத்தரு மத்தவனைத் திருடன்னு எழுதச் சொல்லி நல்லா முன்னுக்கு வரவேண்டிய ஆட்களைக் கூலிக்கு அமர்த்திக்—குஷாலாத்திரிஞ்சிக்கிட்டிருக்காரு ...அடடே! ரொம்பநேரம் ஆச்சு ...ஆமா! நீ எப்படி ஒரு வீட்டுச் சன்னலை உடைச்சு உள்ளே குதிப்பே..."

"ஏங்க! சப்தம் ஏற்படாமலே கதவைத் திறக்கிறது எப்படின்னு அமெரிக்காவிலே புதுசா ஒரு முறை கண்டுபிடிச்சிருக்காங்க... அதை உனக்குச் சொல்லித் தர்றேன்..."

"ஆகா, சாமி! இப்படியொரு குருநாதர் எனக்குக் கிடைக்கலியேன்னுதான் நான் இத்தனை நாளும் அலைஞ்சுக்கிட்டிருந்தேன் என்னைப்பார்த்து நீங்க பயப்படாமெ இருந்தபோதே நினைச்சேன், நீங்க ஒரு பெரிய ஆளுண்ணு...புதுப்புது முறைகளைச் சொல்லிக் கொடுத்து இந்த சிஷ்யனை நீங்கதான் லட்சம் திருடும் பெரியவனாக்கணும்..." என்று கற்பனைக் கமலாவின் காலில் விழுந்தான் கள்ளன்.

(தொடரும்)

நம்பமுடியுமா ?

"திரு. சம்பத் புதிதாகக் கூறுகிற தமிழ் தேசியமும் அவரை ஒரு சந்தர்ப்பவாதி என்றே சொல்லவேண்டியுள்ளது. நான் வடக்கெல்லைப் போர் நடத்தியகாலத்தில் தமிழ் மக்களுக்கு ஆதரவாகப் பேசியவர்கள்திரு பூபேசுகுப்தாவும் திரு. கே. டி. கே. தங்கமணியுமே தவிர,பாராளுமன்ற உறுப்பினர் பதவி வகிக்கும் திரு. சம்பத் அல்ல. அவர் தி. மு. க.வில் இருக்கும்போதே தனக்குத் தமிழ்தேசிய உணர்வு வந்துள்ளது என்று கூறுவது உண்மையானால் அப்போதே அவர் ஆந்திராவை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்திருக்க வேண்டும். அவர் அதைச் செய்யவில்லை. இங்ஙனம் இதுநாள்வரை தமிழ் தேசிய உணர்வுக்கு விரோதமாகவே செயல்பட்ட ஒருவரை நம்பி எங்ஙனம் மற்றக் கட்சிகள் ஒன்றுசேர இயலும்" என்றார்.

மா. பொ. சி.
இராணிப்பேட்டை.

கலையும்–வாழ்வும்

கலையை சிலபேர் வாழ்வதற்காக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் கலையை மானத்தோடு வாழ்வதற்கு வைத்துக்கொண்டிருக்கிறோம்! கலை யென்று சொன்னால் சினிமாக் கலையும், நாடகக் கலையும்தான் மக்களுடைய கவனத்துக்கு வருகிறது — மக்களுடைய கவனத்துக்குமட்டுமல்ல, மந்திரிகளுடைய கவனத்திலும் சதா, இவைதான், இன்றைய தினம் இருக்கின்றன. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் சினிமா, நாடகக் கலை யென்றால், கருதப்பட்டதற்கும் இப்போது கருதப்படுவதற்கும் வித்தியாசமுண்டு. 'போகிறான் பார் கூத்தாடி!' என்று சொல்லப்பட்ட நிலை மாறி,.சினிமா, நாடகம்பால் எல்லோருடைய கவனமும் கருத்தும் ஏற்படும்படி செய்தது திராவிட முன்னேற்றக் கழகம்தான். பத்துப் பதினைந்தாண்டுகளுக்கு முன்பு நடிகர்கள் - உலகத்தைப் பற்றியே கவலைப்படாமல், கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று அலைந்துகொண்டிருந்தார்கள். அப்படிப்பட்டவர்களுடைய நிலையை மாற்றியவர், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவரான நம்முடைய அண்ணாதான்.

இதனால்தான், அரசியல்வாதிகளான அண்ணா போன்றோரைத் திட்டுவதற்கு வார்த்தை யில்லாத காரணத்தால் பெரியார் அவர்கள் 'சினிமாக்காரர்கள்' என்கிறார். நடிகர்களுக்கு அரசியல் கூடாது என்று ஒரு பக்கம் கூச்சல் கேட்டுக்கொண்டிருக்கிறது-- கலைஞர்களுக்குக் கட்சிக் கூடா தென்ற சொல், இன்னொரு பக்கமிருந்து ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அப்படிக் கூறுகிறவர்கள் யார்? ஏன் அப்படிச் சொல்கிறார்கள்? என்பதையே நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எந்த ஆதாரத்தை வைத்து அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள்? காமராசரைக் கேட்கிறேன்! காங்கிரசால் இன்று எம். எல். சி. ஆக்கப்பட்டிருக்கிற திருமதி கே. பி. சுந்தராம்பாள் அவர்கள் தேசீயம் வளர்க்க பாடுபடவில்லையா? திருமங்கலம் விசுவநாததாஸ் 'கொக்குப் பறக்குதடி பாப்பா!' என்ற பாடலைப் பாடிவிட்டு, சிறைக்குப்போகவில்லையா? அப்படிப்பட்ட விசுவநாததாஸ் போன்ற தியாகிகளின் குடும்பங்களை நடுத் தெருவில் அலைய விட்டுவிட்டு, நடிகர்கள் அரசியலில் பங்கு கொள்ளலாமா என்று சொல்வது எதைக்காட்டுகிறது?

நடிகர்கள் அரசியலில் பங்கு கொள்ளக் கூடாது என்று கூறுவது, நடிகர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்பு கொள்ளக் கூடாது, பேசக் கூடாது என்பது தவிர, வேறென்ன? ராசேந்திரன் நடிகனாயிருக்கலாம்; ஆனால் அவனுடைய குழந்தைகள் நடிகர்களாயிருக்க முடியாது! அவனுடைய அண்ணன் தம்பிகள் நடிகர்களாயிருக்க முடியாது! பாட்டன் நடிகனில்லை! நாங்கள் நடிப்பதற்காக வெளி நாட்டிலிருந்து வந்தவர்களல்ல. இந்த மண் எங்களுக்குச் சொந்தமான மண். இன்னும் சொல்ல வேண்டுமானால் சிவகெங்கைச் சீமையிலே, வெள்ளையனை எதிர்த்து வீர மரணம் எய்திய மருதுபாண்டியர்களின் பரம்பரையிலே வந்தவன், இராசேந்திரன். நான் நடிகனாயிருக்கின்ற காரணத்தாலே, என் நாட்டை ஏன் சிந்திக்கக் கூடாது?

ஏன் பேசக் கூடாது? கனக விசயர்கள் தலையிலே கல்லேற்றியவன் சேரன் செங்குட்டுவன்! அவன் பரம்பரையிலே வந்தவர்தான் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள். எங்கள் பெருமதிப்பிற்குரிய கே.ஆர் ராமசாமி அவர்கள், சோழ மண்டலத்தைச் சார்ந்தவர். நடிகமணி டி. வி. நாராயணசாமி, கட்டபொம்மன் வட்டாரத்தைச் சேர்ந்தவர். மதுரையம்பதியை ஆண்டு மாண்ட திருமலை நாயக்கரின் பரம்பரையிலே வந்தவர், வளையாபதி முத்துக்கிருஷ்ணன்! இப்படிப்பட்ட நாங்கள், வெளி நாட்டிலிருந்து வந்தவர்களல்ல. இப்படிப்பட்ட நாங்களா அரசியல் பேசக் கூடாது?

நாங்கள் மேனா மினுக்கிகளல்ல கொண்ட கொள்கைக்காக வாழ்கிறவர்கள்! எங்களுடைய தலைவனிடத்திலே மதிப்புப் பெற்றவர்கள், நாங்கள்.

> மதுரை திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற தி. மு. க. பொதுமாநாட்டில் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் 'கலையும் வாழ்வும் என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் சுருக்கம்:

அந்தக் காலத்திலே அரசர்கள் ஆண்டபோது, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்று இருந்ததைப்போல விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாளர்த் தோழர்கள், டாக்டர்கள் சட்ட நிபுணர்கள், ஆகியோரைப் போல கலைத்துறைப்படையும் இங்கேயிருக்கிறது!! இப்படிப்பட்ட தனிசக்தி, வேறெதற்கும் இல்லாத ஒரு சக்தி, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு மட்டும் இருப்பதாலேயே எங்களைத் தாக்குகிறார்கள். யார் தாக்கினால் என்ன? இதனையெல்லாமா கழகத்தின் மாபெரும் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்திவிட முடியும்? எனக்குத் தெரியும்—நானே எத்தனையோ ஊர்வலங்களைக் கண்டிருக்கிறேன்---ஆனால், மதுரையில் நமது மாநாட்டு ஊர்வலம்! ஏ! அப்பா! நினைத்தாலே நெஞ்சம் புல்லரிக்கிறது. அதிலே வந்த மக்கள்! அடிவயிறு வலிக்க அண்ணா வாழ்க! என்று அவர்கள் எழுப்பிய முழக்கம்! அண்ணாவும், பிற தலைவர்களும் வந்த அழகு!! இப்படி எந்தத் தலைவரை நாம் போற்றுகிறோமோ, புன்சிரிப்பைக் கண்டு மகிழ்கிறோமோ, அப்படிப்பட்ட ஆற்றல் மிக்கத் தலைவரை, அன்புருவை, இந்த நாட்டிலுள்ள சில சில்லரை ஏடுகள் எப்படியெப்படி படங்கள் போடுகின்றன, என்னென்ன எழுதுகின்றன, என்று எண்ணும்போது, மனம் துடிக்கிறது.

இப்படிப்பட்ட மனத்துடிப்படைந்தால் மட்டும் போதாது, அப்படிப்பட்ட குப்பைப் பத்திரிகைகளை நாம் வாங்குவதில்லையென்றும் சபதம் எடுக்கவேண்டும்! அதுதான், அவைகளுக்கு நாம் தருகின்ற சரியான பதிலாகும்!!

வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல் இங்கிலீஷ்படிக்கவும் பேசவும் கடிதங்கள்எழுதவும்கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரியபைண்டு புத்தகம் விலை ரூ. 5வி.பி.பி.செலவுரூ.1-25

வாணி தமிழ், இந்தி சுபோதினி

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ, 2-25 வி.பி.பி.செலவு 75 ந.பை.

ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)

சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத்தைலம், ஸ்னோ. பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது. விலை ரூ, 3. வி. பி. பி. செலவு ரூ 1.

குடும்ப இலகு வைத்தியம்

வீட்டு சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கி, ஆரோக்கியம், பலம், ஆண்மை பெறுவது போன்ற அநேக வைத்திய ரகசியங்களடங்கியது. தபால் செலவோடு ரூ. 3-50

வாணி புக் டிபோ, 3, மலைய பெருமாள் தெரு,
(தபால் பெட்டி எண்: 239) சென்னை-1.

நீங்களும்

அண்ணல் அண்ணு!

அறப்போர் மலரின் அறிவுச் சோலையினுள் புகுந்து கொள்கை மணம் நுகர்ந்து வெளியில் (அதாவது கடைசிப் பக்கம்) வந்தேன். உங்களது நல் உள்ளத்தை திறந்து காட்டியுள்ளீர்கள் நமது மாநாட்டிலே கலைக் கண்காட்சியில் வடவர் ஆட்சியினுல் தென்ஞட்டிற்கு ஏற்பட்ட தீமைகளை எடுத்துக் காட்டினது போல்.

விடுதலையியக்கத்திலே இறங்கி விட்ட இளைய அண்ணு, நாட்டை விடுவிக்க நீங்கள் அரும்பாடு பட்டுவரும்சமையம் கைப்பொருள் இழந்துவிடக்கூடாது. அறப்போர் இதே அளவு வந்தாலும் பரவாயில்லை. விலையைக் கூட்டிக் கொள்ளுங்கள். இதையே வாங்க வழியில்லாத நிலைமையில் இருக்கும்போது இன்னும் விலையைக் கூட்டச் சொல்லுகின்றேனே எனஎண்ணுகின்றீர்களா.

நானும் ஒரு ஏழைத் தொழிலாளிதான். எங்களது இரண்டு நேரத்து டீக்குச் செலவாகும் காசுகளை அறப்போருக்குத் தருகிறோம். பத்து சிகரெட் குடித்தால் அதை ஐந்தாகக் குறைத்துக்கொண்டு மீதியை அறப்போருக்குத் தருகிறோம். 4 அணு வெற்றிலைக்குச் செலவாஞல் 2 அணுவோடு முடித்துக் கொண்டு மீதி 2 அணுவை அறப்போர் வாங்க வைத்துக் கொள்வோம்.

இவ்வளவு கொள்கையிலே பற்று கொண்ட தம்பிகள் இருக்கும்போது ஏனண்ணு மனம் கலங்க வேண்டும். அறப்போரை இன்னும் நல்ல பல கட்டுரை, கதைகள் அலங்கரிக்கட்டும். தம்பியுடையான் படைக்கஞ்சான் என நம் அண்ணு கூறும் பொன்மொழிகளை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

மீண்டும் உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

உடன்பிறவா தம்பி,
நாஞ்சில் ப.இ. இளங்கோ
குர்லா,
பம்பாய்-70.

* * *

அன்புடையீர்!

வணக்கம். மாநாட்டு மலர் கண்டேன். பக்கத்துக்குப் பக்கம் சிறப்புக்கள் மண்டிக் கிடக்கிறது! மலர் மணம் வீசும் என் பார்கள்; ஆனல் இந்த மலர் மாநாட்டுக் கருத்துக்களை மனதில் பதிய வைத்துவிட்டது! குறுகிய காலத்தில் பெரிய ஏற்பாடு! அரங்கண்ணலின் முத்திரைக்கு ஈடு அரங்கண்ணலின் முத்திரையே! அறப்போர் வெல்க!

அன்புள்ள,
ந. தருமலிங்கம்
திருத்துறைப்பூண்டி.

* * *

ஆற்றல்மிகு,

அண்ணனுக்கு!

வணக்கம் பல!

அழகிய தாளில் இருபத்தியெட்டு பக்கங்களில் குறைந்த விலையில், குறுகிய காலத்தில் அழகிய புகைப்படங்களுடன் மலரை வெளியிட்ட தங்களை பாராட்டா மலிருக்க என்னுல் இயலவில்லை.

குறிப்பாக மலரில் ஏற்றமிகு கட்டுரைகள் இடம் பெற்றிருப்பதோடு அல்லாமல் சிந்திக்கவும் செய்கின்றது. 'திராவிட நாடு ஏன்? என்ற கட்டுரை மிகவும் நன்ருயிருக்கின்றது. அடுத்து 'ஒரு கல்லின் கதை', 'ஓர்ஆசைக்காரன் கதை', 'ஒரு முட்டாளின் கதை' இவை மூன்றும் நம்மிடையே இருந்து, நம்மால் உயர்ந்து, நம்மால் வாழ்வு நடத்தும் துரோகிகளின் நிலையினை விளக்கும் கதைகளாக காட்சியளிக்கின்றன.

தவிர்த்து, தானைத் தலைவர், தண்டமிழ் வீரர், தரணி போற்றும் தீரர், தென்னகத்து மூடிசூடா மன்னர் அறிஞர் பெருந்தகையின் 'அடைவோம் நம் உரிமை' என்ற தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ள முன்னுரையே மலரின் முழுவெற்றிக்கு அறிகுறியாக காட்சியளிக்கின்றது. அடுத்து தாங்கள் வரைந்திருக்கும் 'குன்றத்திலே கொள்கைக் குன்றுகள்' என்ற கட்டுரையை யான்படிக்கும் நேரத்தில் 'மாநாட்டுக்குச் சென்றிருந்த போதிலும் யான்மலரின்சிறப்பைவிளக்குவது என்றுல் எம்மால் இயலாத காரியமாகும்.

வாழ்க அறப்போர் என்று என் இதய பூரிப்போடு வாழ்த்தி முடிக்கின்றேன்.

நன்றி! வணக்கம்!!

தம்பி,
மயிலை. வே. தமிழ்மணி.
தமிழகம்.

* * *

ஆசிரியர்,

அரங்கண்ணல் அவர்களுக்கு,

வணக்கம். மலர் சுவைத்தேன். மலரின் மதிப்பு அதிகம். விலையோ குறைவுதான். எவ்வளவு புகைப்படங்கள் குறையே இல்லாத வகையில் ஜீவன், சாமுவேல், ஜயா மற்றும் நண்பர்கள் சிறப்பாக அமைத்துள்ளார்கள். தாங்கள் எழுதியுள்ள கடைசிப் பக்கம் சார்பற்ற எனக்கே கண்களில் நீர்வடிகிறது. 1952 என்று ஞாபகம் திருவாரூர் தெற்குவீதியில் கலைஞர் வீட்டிற்கு எதிரில் நடந்த பொதுக்கூட்டத்தில் தங்களுடைய பேச்சை கேட்டேன். பிறகு 4 மாதமாக அறப்போர் மூலம் தங்களுடைய கருத்தை அறிகின்றேன். விரைவிலே அறப்போர் பல இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் என்பதில் ஐயமில்லை. எழுத்துப் பிழை ஆங்காங்கே தென்படுகின்றன. முயற்சி வெல்க, வாழ்க அண்ணன் அரங்கண்ணல்.

இப்படிக்கு,
கே. பி. மொஹிதீன்,
நெ. 66, ஜின்னு தெரு,
அய்யம்பேட்டை போஸ்டு'
தஞ்சை மாவட்டம்.

* * *

பேரன்புமிக்க!

அன்பும், பண்பும், அறிவும், ஆற்றலும் கொண்ட அண்ணன் இராம. அரங்கண்ணல் அவர் கட்கு, வணக்கம் பல!

தங்களுடைய "அறப்போர்" மாநாட்டு சிறப்பிதழ் ஒன்று கிடைத்தது. மட்டற்ற மகிழ்ச்சி!

தங்களுடைய 'அறப்போர்' சிறப்பிதழ் தேனமுதமாய் இனிக்கிறது. நான் 'அறப்போர்' சிறப்பிதழை தினந்தோறும் படித்துப் படித்து மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிறேன்.

மாநாட்டு சிறப்பிதழில் அறிஞர் அண்ணுவின் பேச்சும் தங்களுடைய "குன்றத்து கொள்கை குன்றுகள்" கலைஞர் மு. கருணுநிதியின் 'கொள்கை மூச்சு' முரசொலிமாறன் எம். ஏயின் 'மொழியும் தேசிய இனமும்' புலவேசத்தியின் 'இது சகஜமும்' சி. பி. சி.யின் வீர வணக்கமும், மற்றும் நமது புகைப்படங்களும் மலருக்கு சிறப்பை தந்து இருக்கிறது.

இந்த மலர் எனது மனதையே கவர்ந்தன. வாழ்க அறப்போர்! வெல்க திராவிடம்!! ஆசிரியர் அரங்கண்ணல் நீடூழி வாழ்க வாழ்களன வாழ்த்துகிறேன்!

இப்படிக்கு,
தங்களுடைய
திராவிடத்தின் தம்பி,
எம். ஜி. லெனின்
மங்க நல்லூர், கடைத்தெரு,
அஞ்சல்,
மாயவரம் கூற்றம்.

* * *

வாழ்க அறப்போர்!
வாழ்க அண்ணு!
ஓங்குக லட்சியம்!

திரு,

அன்புள்ள அறப்போர் ஆசிரியர் அரங்கண்ணல் அவர்களுக்கு அன்பார்ந்த வணக்கம். நீங்கள் வெளியிட்ட மதுரை மாநாட்டு மலரை கண்டேன். நீங்கள் வெளியிட்ட மலர் ரொம்பவும் கஷ்டப்பட்டு வெளியிட்டிருக்கிறீர்.

மேயர் முனுசாமியின் அயல் நாடுகளில் ஐம்பது நாள் கட்டுரை வராததினுல் ஏமாற்றம் அடைந்தேன். 'திராவிட நாடு திராவிடருக்கே! வெல்க திராவிடம்! வாழ்க அண்ணு! வாழ்க அறப்போர்! வணக்கம்.

இராமு. மனேகரன்.
நெ. 42, ஆர்பர் லயின்,
பனைமர தொட்டி,
ராயபுரம், சென்னை-13.
(தமிழ்நாடு)
8-வது வட்டம்.

* * *

ஆசிரியர்,

அண்ணல் அவர்கட்கு, வணக்கம். மாநாட்டு மலரைக் கண்டேன். அறிஞர் அண்ணுவின் முகப்புத்தோற்றமே முதல் அற்புதமான—தனிமலராகஅமைந்து விட்டது. இம்மலரைப் பார்க்க எத்தனை தடவை கடைக்காரரிடம் போய் வருவது? அப்பப்பா, ஒரு வாரமாக நான்பட்ட வேதனை கொஞ்ச நஞ்சமல்ல; எனக்கு முன் என் அண்ணு பொன்னரசன் அவர்கள் 'அறப்போர்' இன்னும் வரவில்லையா? என்ற கேள்வியே! யாரை எப்படி பாராட்டுவது என்று எனக்கே தெரியவில்லை. மொத்தத்தில் எல்லா அண்ணன், தம்பி, தங்கை, தமக்கை, தாய்மார்களை அறப்போரில் கண்டேன். எல்லோருக்கும் என் அன்பு வணக்கம்.

சி. மார்டின்,
பொன்வயல் (கோலார்)

நானும்



பாண்டி மாநாடு

ம. மு. முகைதீன்

பாண்டியன் நகரைக் கண்டேன்
பகலவன் ஒளியைக் கண்டேன்
ஆண்டவர் நாங்க ளென்ற
ஆண்மையை அகத்தில் கொண்டோர்
மாண்புடன் விளங்கக் கண்டேன்
மறப்புயம் வீங்கக் கண்டேன்
வான்புகழ்க் காவியங் கள்
வடித்திடக் கண்டேன் நெஞ்சில்

விடுதலைப் படையைக் கண்டேன்
வியப்புறு தலைவர் கண்டேன்
கொடிபல ஓங்கி விண்ணைக்
குறையுள தாக்கக் கண்டேன்
மடை திறந் தாற்போல் பேசும்
மணிமொழிக் குவியல் கண்டேன்
சடுதியில் திராவிடத் தின்
தளையறும் எனறே கொண்டேன்

பகைவரும் வியந்து போற்றும்
பாண்டி மாநாடு என்பேன்
தகைமையற் தன்நெஞ் சாறத்
தகுபடை வீடென் பாரே!
இகமதில் இம்மாநா ட்டின்
எழுச்சி போல் எங்கும் காணேன்
அகமதில் என்றும் வாழும்
அற்புதம் என்பேன்; பொய்யோ?

2-ம்பக்கத் தொடர்ச்சி

ஜெர்மானியர் கடந்த உலகப் போரின்போது இரண்டு போர்களை நடத்தினர்—ஒன்று நேசநாடுகளுடன்! இன்னொன்று யூதர்களுடன்!!

அப்பப்பா, அறுபது லட்சம் உயிர்கள் கொல்லப்பட்டன என்ருல்...! கூட்டம் கூட்டமாகப் புழுக்களைப் போலப் பிணங்கள் கொட்டப்பட்டன வென்ருல்...!! அப்படிக் கொலைக்களத்துக்குக் கொண்டுபோகப் படுமுன், யூதப் பெண்களையும், வாலிபர்களையும் நாஜி வெறியர்கள் செய்த கொடுமைகளின் ஆபாசங்களை எழுத என் மனம் துணியாததால் விட்டுவிட்டேன். உதாரணத்துக்கு ஒன்று:

யூதப் பெண்களையும் வாலிபர்களையும் பிறந்த மேனியாக, காட்டுக்குள் கொண்டுபோய் அவர்களுடைய மனநிலை எப்படியிருக்கிறதென ஆராய்ந்தார்களாம்! ஒரு யூதப் பெண்ணைப் போட்டு அடி அடியென்று அடிப்பது, அவள் மெய் மறக்கிற அளவுக்குச் செ . துவிட்டு அந்த நிலையில் ஒரு யூத வாலிபனைவிட்டுப் புணர்ச்சி செய்யச் சொல்வார்களாம்! அதேபோல ஒரு யூத வாலிபனை அடித்து அவன் கைகால் மனம் எல்லாம் உயிருக்கு மன்ருடும் போது ஒரு யூதப் பெண்ணை அவனுடன் சாகும்படி வலியுறுத்துவார்களாம்! இதைவிட விந்தை, அருகிலிருந்து கொண்டு அடிபட்டவர்களுடைய நாடித்துடிப்பு, உடம்புச்சூடு முதலியவைகளைக் குறிப்பிலெடுத்து, 'ஆராய்ச்சி' செய்வதாகக் குறிப்பார்களாம்.

இப்படி மனம்போன போக்கில் என்னென்ன செய்ய முடியுமோ, அத்தனையும் செய்திருக்கிருர்கள்! கொலையைவிட மனதைக் கொலை செய்வது எவ்வளவு பெரிய கொடுமை ஒரேயடியாகச் செத்து ஒழியலாம். ஆனல் சஈக முடியாமல் ஒவ்வொரு விஞடியும் சித்திரவதை செய்யப்படுவது எவ்வளவு பெரிய கொடுமை.

இதையெல்லாம் யூத சமூகம் எப்படி எண்ணியிருக்கும்? அதனுல்தான் அவர்களுடைய இஸ்ரேல் அரசு, ஈச்மென்னைப்பிடித்து விசாரிப்பதில், இவ்வளவு அக்கரை காட்டியது! ஒவ்வொரு நாளும் இந்த வழக்கைப்பற்றி, மக்கள் அவ்வளவுசிரத்தைகாட்டுகின்றனர்! நாஜிகள் செய்த கொடுமைகளைப்பற்றி தமது மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகப் படங்கள் நிரம்பிய பல துண்டுப் பிரசுரங்களைப் போட்டுள்ளனர். அதில் ஒரு காட்சிதான் கீழே:



"பழி வாங்கும் உணர்ச்சியோடு நாங்கள் நடக்கவில்லை. வெறியின் காரணமாக ஒரு பெரிய சமூகத்தையே ஒழிப்பதற்கு நடைபெற்ற சம்பவங்கள் என்னவென்பதை எதிர்காலஉலகுக்கு வழங்கவே, ஈச்மென வழக்கை நடத்துகிருேம்," என்கிருர் இஸ்ரேலியப் பிரதமர் பென் குரியன்.

நாஜிகள் செய்த கொடுமைகளை அறியும் நம்மனமே கலங்கும்போது யூத வாலிபாகள் உள்ளமும், யூதர்களின் எதிர்காலச் சந்ததியும் மிக மிகத் துடிக்கும். அப்படித் துடிப்பு ஏற்படுவது ஆத்திரத்தைக் காட்டும் பழி உணர்ச்சியாக மாறிவிடக் கூடாது. உன்னை அடித்தவனையும் நேசி!—என்கிற இயேசுநாதரைத் தந்த மண்ணுக்குரிய யூதர்கள். அந்த வழியிலேயே ஆத்திரத்தை அடக்கிச் செல்லும்படியான பாதையை இன்றைய இஸ்ரேல் செய்ய வேண்டும். இன்றேல்! ஜெர்மனியில் ஒரு ஈச்மேன் கிளம்பியதைப்போல இஸ்ரேலிலும் ஒரு வெறியன் தோன்ற மாட்டான் என்று சொல்ல முடியாது!!

இப்படி பாதிக்கப்பட்ட இனம் உயர்ந்ததையும் விரோதித்துக் கொண்டே போனல் உலகம் இன்ப பூமியாக என்றும் அமையாது. இப்படிப்பட்ட விரோத உணர்ச்சிகளை மாற்றி அன்பு மயமாக்கவேண்டும்முள்ளமலராக்கும் இப்பொறுப்பில் ஈடுபடும் பொதுப் பணியாளர்கள் வேண்டும்!! வீண் கூச்சல்காரர்கள், வீம்பாளர்கள், விரோத மூட்டியே உயர்வுபெற நினைப்போர் பொதுவாழ்க்கையிலிருந்து அகல வேண்டும்.

இந்த ஆசையுடன் எழுதத் துவங்கும் ஈச்மெனின் இந்தக் கொடுமை வ, லாற்றின் முதல் பகுதியை கண்ணீரோடு முடிக்கிறேன்!

அடுத்த இதழ் முதல்—ஹிட்லரின் வளர்ச்சி நாஜிசம் உண்டானது—அதன் முடிவு—கடைசியில் நாஜித் தலைவர்கள் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்ட போதுகூறியவை—முதலியவிளக்கங்களைத் தொடரலாமெனஇருக்கிறேன்! சுவையும் பலனுமுள்ள பகுதியாகும்!! வணக்கம்.

—0—

கேள்வி பதில்

கே: எங்கள் ஊர் கலைவாணர் படிப்பகச் சார்பில் கூட்டம் போட்டு தோழர்...........க்கு வழிச் செலவுக்கு ரூ. 30 அனுப்பினேம். அவர் நேரில் சொன்னபடி வராமல் ஏமாற்றி விட்டார். பிறகு எழுதியதற்கு அடுத்தக்கூட்டம்ஏற்பாடுசெய்தால் வருகிறேன் என்று எழுதினர். அப்படியே செய்தோம்; வரவில்லை. பணம் அனுப்பி ஓராண்டு ஆகிறது. இப்போது அவர் சம்பத்தின் கட்சியில் சேர்ந்து விட்டார்! நாங்கள் மிகவும் சிரமப்பட்டு வசூலித்து அனுப்பிய பண ரசீதை இன்னும் பத்திரமாக வைத்திருக்கிறோம் மேற்படிபணத்தைப்பெற நாங்கள் என்ன நடவடிக்கை-அண்ணு எடுக்கலாம்?

க. பரமசிவம்,
து. செயலாளர்,
ஆடலூர், மதுரை மாவட்டம்.

ப: தலைவர் எப்படியோ அப்படியே அவருடையதோழர்களும் அந்தரசீதை 'பிளாக்' எடுத்து சந்தர்ப்பம் வரும்போது நோட்டீசு அடித்துக் கொடுங்கள். அரசியலில்நாணயமில்லாதவர்களுக்கு மக்கள் மன்றத்தை விடப் பெரிய நீதிமன்றம் இல்லை.

* * *

கே: நமது திராவிட முன்னேற்றக் கழகத்தில் எத்தனை மேடைப் பேச்சாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் படிப்பையும், வரிசையாக எழுதும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எஸ். எம். தாஜரதீன்
விழுப்புரம்

ப: எண்ணுகிற அளவைத் தாண்டிய பேச்சாளர்கள்இருக்கும்போது எப்படித் தோழரே விவரம்தர முடியும்? கிளைக் கழகத்திலுள்ள ஒவ்வொரு செயலாளரும் உறுப்பினரும் பேசுவதைக் கேட்கும்போது ஆகா! எப்படிப் பேசுகிறார்கள் என்கிற வியப்பே வருகிறது. மேடைப்பேச்சு, ஒருசிலருககே வரும் என்கிற நிலைமை மாறி எல்லோரும் பேச முடியும் என்கிற சூழ்நிலையை உலகிலே உண்டாக்கிய இயக்கம் அநேகமாக தி. மு.கவாகத்தானிருக்க முடியும். இலட்சியம்—தெளிவு இதயவேகம் இந்த மூன்றுமிருந்தால் யாரும் பேச்சாளராகலாம்! இந்த மூன்றும் நமதுகழகத்திலுள்ளசாதாரண உறுப்பினரிடமும் காணக் கிடைப்பது, ஒரு விடுதலை இயக்கத்தின் மாபெரும் எழுச்சிக்கு அடையாளமாகும்!

* * *

கே: கழகக் கட்டுப்பாட்டைமீறி நடக்கும் 'தனியரசார்' மீது தலைமைக் கழகம் நடவடிக்கை எடுக்காததேன்?

மு. நெடுமாறன்
திருப்புகலூர்

ப: நடவடிக்கை எடுக்காமலிருப்பதே ஒரு நடவடிக்கைதான் என்பதை நன்ருக யோசித்தால் விளங்கும்!

* * *

கே: தங்களை உயர்த்தியவர்கள் வரிசையில் ஆ. திராவிடமணி என்று குறிப்பிட்டிருக்கிறீர்களே, அவர் எந்த ஊர்?

எஸ். ராம்சிங்
கோவில்பட்டி

ப: கடலூரிலிருந்தார் — குமஸ்தாவாக! பிறகு பெரியாருடைய 'விடுதலை'யில் மானேஜராக யிருந்தார்! இப்போது சென்னையில் ஒரு அச்சகம் அமைத்துக்கொண்டு, எதிலும் சம்பந்தப்படாமலிருக்கிறார்.

* * *

கே: குலமுறை அண்ணு என்னும் கொடி நிழல் தலைவா என்றும் கலைமணம் அறிவே என்னும் கவிக்குரல் புலவா என்னும் அலை மிழ் உயிரே என்னும் அவனியே புனிதா? என்னும் தலைமுறைக்கிவரல்லாது தலைவரென்றொருவரில்லை என்று பாடல் இயற்றிய கண்ணதாசன் 'தோலாயுதங்களின் தலைவர்' என்கிருரே அவரை என்னவென்பது?

அதே தோழர்.

ப: அவரை ஒன்றும் சொல்ல வேண்டாம். அவர் பேச்சும் எழுத்தும் ஒரு நிலையிலிருக்காது.

* * *

கே: இந்தியைப் பரப்புவதற்கென்று டில்லி சர்க்கார் வெளிநாடுகளில்கூடப் பணம் செலவழிக்கிருர்களாமேன்ன ?

—ஏ. எஸ். கிட்டு,
முடிச்சூர்.

அந்த அக்கிரமத்தை ஏன் கேட்கிறீர்கள்! 1955—ல் இது பற்றி தரப்பட்ட புள்ளிவிபரத்தைத் தருகிறேன் — இந்த ஆருண்டுகளில் இது எவ்வளவு வளர்ந்ததென்று, இன்னும் கணக்கு கிட்டவில்லை. அந்த விபரமாவது: நேபாளம், இந்தோனேஷியா ஆகிய இடங்களுக்கு இந்தி ஆசிரியர்கள் அனுப்பட்டார்கள். மேற்கிந்தியத் தீவுகளுக்கு ரூ. 75000 சன்மானம். தென்கிழக்காசியாவுக்கு ரூ. 50000. கிழக்கு ஆபிரிகா, 15 ஆசிரியர்களுக்கு இந்தி சொல்லிக் கொடுப்பதற்காக மாதா மாதம் கௌரவச் சம்பளம் ரூ. 200. பீகிங், ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களுக்கும் பல ஆசிரியர்கள் அனுப்பப்பட்டனராம்!

கே: தாங்கள் எழுதும் "சலசலப்பு ஜானகி"யைப் பற்றி தென்றலில் எழுதப்பட்டதைக் கண்டீர்களா?

—வெங்கட்டராமன்
திருமழிசை.

என்மீது மிகவும் அன்புள்ளவர்கள் இருக்குமிடம் அது! என் முகவரியைத் தர வாய்ப்பில்லையே. என்று காத்திருந்த எழுத்தாள நண்பர், இந்தச் சந்தர்ப்பத்தை எனக்காக உண்டு பண்ணிக் கொண்டிருக்கிருர், பணிபுரியும் அந்த ஏட்டில்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடங்கள் இருக்கின்றன! அவர் இல்லை—போய்விட்டார்!!

உண்மையில் இந்த இழப்பினை 'விடுதலை' ஆசிரியரான அண்ணன் குருசாமியால் தாங்கிக் கொள்வது சிரமம்தான். வள்ளுவர் கூறியுள்ள வார்த்தைகளின் சின்னங்களாக விளங்கியவர்கள் இருவரும்!! சுயமரியாதை இயக்கத்தின் முதல் கலப்புமணத் தம்பதிகள் எனும் பெருமையைப் பெற்றவர்கள், அந்தப்பெருமை நீடிக்கும்வகையில் வாழ்வதையே கடமையெனக் கொண்டிருந்தவர்கள் அவர்கள்.

கழகம் பிரிந்த பிறகு, முன்போல நம்மால் அம்மையாரைக் காண முடிவதில்லை! செய்தி எட்டி சென்று கண்டபோது, அத்திரு உருவம் உயிரற்ற சடலமாயிருந்தது!! நமக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

பிறப்பும் இறப்பும் சகஜம்தான்! ஆனல் 'இறந்தோரை எண்ணும் நேரத்தில் மனிதனுக்கு 'என்ன உலகம் இது!' என்றே தோன்றும். சாவின் கொடுமை பெரிது! என்ருலும் தாங்கிக் கொண்டு நடப்பதில்தானே உலகம் இயங்கி வருகிறது. அண்ணன் குருசாமியுடைய கண்ணீரைத் துடைக்குமளவுக்குத் நமக்குதுணிவில்லை—வயதுமில்லை! எனினும் நம்முடைய ஆழ்ந்த அன்பையும், அனுதாபத்தையும், 'அறப்போர்' சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்!!

அவர் தம் இல்லத்தாருக்கும் குழந்தைகள் கவுதமன், ரஷ்யா ஆகியோருக்கும் நமது அனுதாபங்கள் உரியதாகுக.

வாழ்க குஞ்சிதம் அம்மையார் திருநாமம்! வளர்க அவர் பாடுபட்ட அறிவியக்கம்!! *

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

துண்டுப் பேச்சு — அய்யாவின் முரட்டுத்தனமான வாதம் — இவைகளை வைத்தே, மாற்ருர்களுக்குப் பதில் சொல்வார்கள் அந்த நாள் தோழர்கள். அவைகளைப் படித்துக் காட்டியும், வாதமிட்டும்; ஆட்களைச் சேர்ப்பார்கள். இப்படி வாதமிடப்போய் வம்பில் முடிவதுண்டு. அப்படியிருந்த நிலைமை மாறி, ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு ஆண்டுக்குள்ள பதிலாக மாறியது அண்ணுவின் பேச்சாலும் எழுத்தாலும் தான்! சிங்கங்கள் கர்ச்சித்தபோது சண்டைக்கு இழுப்பது போல அஞ்சியவர்கள், இதே பிரச்சினைகளைக் குயிலின் நாதமாகக் கேட்டபோது மெய் மறக்கலாயினர்! "என்ன மோய்யா! பேசுகிற விஷயம் பிடிக்கலேன்னுலும், பேசுகிற அழகு இருக்கே அழகு!! அதுக்காகத்தான் போறேன்," என்ருேரும், "என்னமோ! எழுதுறது கடுமையா இருக்குன்னுலும், அந்தத் தமிழிருக்கே, அழ தம் அடுக்கும் கலந்த தமிழ் அதுக்காகத்தான் படிக்கிறேன்", என்போரும் உருவாகலாயினர். ஒரு மாபெரும் அறிவியக்கத்தில் புரட்சிக்கரமான கொள்கைகளைப் புனுகுபோலப் புகுத்தியவர் அண்ணுதான்!!

அப்போதுமட்டுமல்ல, இப்போதும், அண்ணு அவர்களுடைய 'பணி', எதையும் மிதமாகவும் அழகாகவும் சிலேடையாகவும் சொல்வதுதான். இதன் நோக்கம், மாற்ருர் மனம் புண்படாமல், நம் கருத்தைச் சொல்லவேண்டும் என்பதுதான். இந்த நெறியினையே இன்று அவர் திராவிட முன்னேற்றக் கழகத்திலும் உருவாக்கியிருக்கிருர்!" காட்டாறுகள் பாய்வதல்ல அரசியல்; அது கனி மரக்காவாக இருக்க வேண்டும். புயல் அல்ல அரசியல்; அது ஒரு பூங்காபோல அமைய வேண்டும்," என்பது அவருடைய அரசியற் கோட்பாடாகும்.

[வளரும்]

"சந்தா விவரம்"

அதிகப்பிரதிகள் வேண்டுவோர், ஒவ்வொரு செவ்வாய்கிழமைக்குள்ளும், தெரிவிக்கவும். முன்பணத்தோடு வருபவைகளே, முத்லிடம் பெறும்.

சந்தா விபரம்

* * *

ஓராண்டு	—	ரூ. 8
அரையாண்டு	—	ரூ. 4

*ஆசிரியருக்கு எழுதுவோர், அவர்பெயரிட்டும், பொறுப்பாளருக்கு . எழுதுவோர், பொறுப்பாளர் அறப்போர், எனவும் ' எழுதுக.

பொறுப்பாளர் ''அறப்போர்' சென்னை-24

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 12- 3. வது குறுக்குத்தெரு சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6